# அண்ணா சமாதியில் பல லட்சம் பேர் அஞ்சலி


Registered as a News paper in Ceylon விலை சதம் 15

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389
இதழ்: 356
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

யாழ்ப்பாணம் தை 22 ஜுல்கஃ 26 புதன்கிழமை [4-2-70]


## கருணாநிதி தலைமையில் மௌன ஊர்வலம்

சென்னை, பெப் 3

காலஞ்சென்ற தமிழ் நாடு முதல்வர் திரு. சி. என் அண்ணாதுரையின் சமாதியில் இன்று லட்சக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

சென்னை நகரிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் இன்று அதிகாலை தொடக்கம் திரள்திரளாக மக்கள் அண்ணாவின் சமாதி நோக்கி வந்தவண்ண மிருந்தார்கள். இன்று மத்தியானம் வரை குறைந்தது இரண்டு லட்சம் பேருக்குமேல் அண்ணாவின் சமாதியில் அஞ்சலிசெலுத்தினார்கள்.

அறிஞர் அண்ணாதுரை காலமாகி ஒருவருடம் பூர்த்தியானதையொட்டி தமிழ் நாடுமுழுவதும் இன்று அண்ணா மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. ராஜாஜி மண்டபத்திலிருந்து தமிழ் நாடு முதலமைச்சர் திரு மு கருணாநிதி தலைமையில் ஒரு லட்சம் பேருக்கு மேல் மௌனமாக ஊர்வலமாக இன்று காலையில் அண்ணா சமாதிக்குச்சென்று அஞ்சலி செலுத்தினார்கள் சப்தமின்றி புறப்பட்ட இந்த ஊர்வலத்தில் திரு கருணாநிதியைத் தொடர்ந்து மற்ற மந்திரிகளும் தி. மு, க. பிரமுகர்களும் சென்றார்கள். ஊர்வலத்தினர் தம்கைகளில் கறுப்புப்பட்டிகளை அணிந்திருந்தார்கள். அண்ணாவின் உருவத்தையும் தி மு க கொடியையும் ஊர்வலத்தினர் எடுத்துச் சென்றார்கள் அண்ணாசமாதியில் முதலில் திருகருணாநிதிமலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார் அதனைத் தொடர்ந்து மற்ற மந்திரிகளும் பிரமுகர்களும் மலர் வளையங்களை வைத்தார்கள்

### அண்ணா முத்திரை

இன்று காலையில் சென்னை பல்கலைக்கழக மண்டபத்தில் இடம் பெற்ற ஒரு நிகழ்ச்சியில் மத்திய செய்தித்துறை ஸ்டேட் மந்திரி சேர் சிங் அறிஞர் அண்ணாவின் உருவம் பொறித்த தபாற் தலையை வெளியிட்டு வைத்தார் இந்நிகழ்ச்சிக்கு தமிழ் நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங் தலைமைவகித்தார்.

அன்பினாலும்பண்பினாலும் எல்லாவித மக்களையும் காலஞ்சென்ற முதல்வர் அண்ணாதுரை அவர்கள் கவர்ந்தார் தமிழ் ஆங்கிலம் இருமொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த அவர் ஏழைமக்களின் நலன்களுக்காகப் பாடுபட்டார் அவர் நினைவு மக்கள் மனதில் எப்பொழுதுமே நிலை நிற்கும் என்று திரு சேர்சிங் பேசுகையில் கூறினார்

திரு கருணாநிதி பேசுகையில் பொது விஷயங்களில் அரசியல் கட்சிகள் யாவும் ஒருங்கிணைந்து உழைக்க வேண்டும் என்று அண்ணா வகுத்துத்தந்த அரசியல் நாகரீகத்தின் வழியே நாம் செயல்படுவதுதான் அவருக்கு நாம் செய்யும் நினைவு அஞ்சலியாகும் என்றார்.

அண்ணாவின் உருவம் பொறித்த தபால் முத்திரைகளைக்கொண்ட அல்பம் ஒன்றைதிரு கருணாநிதியிடம் மத்திய மந்திரி திரு சேர் சிங் வழங்கினார் இதே போன்ற இன்னொரு அல்பத்தை கவர்னர் உஜ்ஜல் சிங்கிடமும் திரு சேர்சிங் வழங்கினார் அண்ணா உருவம் பொறித்த முத்திரையில் அவரது கையெழுத்தும் அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

## வேலை நிறுத்த எதிரொலி

# குழப்பத்தை தூண்டிவிட பாலா தம்பு முயன்றாரா?

## புரட்சிகர பேச்சு பற்றி அரசாங்கம் ஆராய்கிறது

கொழும்பு, செவ்வாய்

தொழிற்சங்கத் தலைவர் பாலா தம்பு நேற்று நிகழ்த்திய சொற்பொழிவொன்று குறித்து அரசாங்கம் அவர்மீது நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றது

''வன்முறைகளுககு வன்முறைகளாலேயே பதிலளிப்போம்'' என்று திரு. பாலாத் தம்பு பேசியதாகக் கூறப்படுகின்றது.

வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ள இலங்கை வர்த்தக ஊழியர்சங்கத்தின் பொதுச் செயலாளரும் தீவிர இடதுசாரித்தலைவருமான திரு. பாலாதமபு தொழிலாளர்கள் மத்தியில் வன்முறைகள் பற்றிப் பேசியதாகக் கூறப்படுகின்றது. இதுபற்றி தீவிர நடவடிக்கை எடுப் நடைபெற்ற தொழிலாளர் கூட்டமொன்றில் திரு. தம்பு பேசுகையில், பலாத்காரத்தைப் பலாத்காரத்தின் மூலமே முறியடிக்க வேண்டுமென்று வலிறுத்தியதாகக் கூறப்படுகின்றது

அ சாங்கம் ... டங்களை நசுக்குவதற்கு வன்முறைகளைப் பயன்படுத் அந்தக் கொலைகாரன் மட்டுமல்ல அவர்களுக்காதரவளிக்கும் ஏஜண்டுகளும்அழிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்ட திரு. தம்பு வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளும், சேனநாயக்கா அரசாங்கத்தின் உள்ளூர் முதலாளிகளும்தான் இந்த ஏஜண்டுகளென்றும் குறிப்

## ஜாதிக சம்பத சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

நேற்று மட்டக்களப்பில் இழுக்கப்பட்ட ஜாதிக சம்பத 11-வது சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

முதல் பரிசு
14 L 001147 - ரூ 81,100

இரண்டாம் பரிசு
08 L 001516 - ரூ. 81,100

மூன்றாம் பரிசு

## ஆசிரியர்களுக்கும் ஒரேவித பென்ஷன்?

கொழும்பு. செவ்

...லைய அரசாங்கஊழியர்களுக்கு வழங்கப்படுவது போலவே ஒரேவிதமான பென்ஷன் ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று சம்பளக் கமிஷன் தனது இரண்டாவது இடைக்கால அறிக்கையில் தெரிவித்திருப்பதாக நம்பகமாக அறியப்படுகின்றது.

இந்த அறிக்கை கவர்னர் ஜெனரலிடம் இன்று சமர்ப்பிக்கப்பட்டது. தற்பொழுது ஆசிரியர்களின் சம்பளத்திலிருந்து அவர்களின் சொந்தப் பென்ஷனுக்கென இரண்டுசத வீதமும் விதவைகளுக்கும் பெற்றாரை இழப்பவர்களுக்குமான பென்ஷ ஊழியர்கள் விதவைகளுக்கும் பெற்றாரை இழப்பவர்களுக்குமான பென்ஷனுக்கு சம்பளத்திலிருந்து நான்கு சத வீதத்தைக் கொடுப்பதோடு தமதுபென்ஷனுக்கென சம்பளத்திலிருந்து எதுவும் கொடுப்பதில்லை இவர்களுக்கான பென்ஷன் தொகை முழுவதையும் அரசாங்கமேவழங்குகின்றது.

இந்த நிலைமையில் ஆசிரியர்களுக்கும் ஒரே அடிப்படையில் பென்ஷன் வழங்க வேண்டுமென திரு, எல். பி.டி. சில்வா தலைமையிலான சம்பளக்கமிஷன் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகின்றது. இது ஏற்கப்பட்டால்,

## எழுத்தாளருக்கு தங்கமோதிரம்

யாழ்ப்பாணம், புதன்

எழுத்தாளர் நா. சண்முகநாதன் (யாழ்வாணன் எழுதிய 'அமரத்துவம்' என்ற சிறுகதைத் தொகுதி விழாவில் யாழ். இலச்சினை பொறித்த தங்க மோதிரமொன்று அவருக்கு வழங்கப்பட்டது.

யாழ். மாநகர சபையில் திரு சண்முகநாதனுடன் பணிபுரியும் சக ஊழியர்கள் சார்பில் மோதிரத்தை மாநகரசபை ஆணையாளர் ஏ. ரி. சுந்தரம் கையளித்தார்.

இழக்கும் குழந்தைகளும் இப்பொழுது பெறுவதை விட இரண்டுமடங்கு அதிக

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

06 L 001516 - ரூ. 81,100

## மூன்றும் பரிசு

06 A 001458 - ரூ. 81,100

தலா 405 ரூபாய் 50 சதம் பெறும் டிக்கட்டுகள் விபரம்:

| | | |
|---|---|---|
| 07 F 001802 | 03 K 001738 | 12 R 000454 |
| 07 W 001459 | 08 D 000791 | 07 F 000629 |
| 01 E 000785 | 14 E 000642 | 05 F 001469 |
| 10 B 001102 | 07 F 001675 | 13 C 000888 |
| 07 G 001110 | 11 Y' 001912 | 02 C 000764 |
| 13 A 001380 | 03 W 001515 | 01 S 001713 |
| 15 O 000581 | 14 S 000812 | 09 Q 000637 |
| 05 Z 001546 | 01 X 001679 | 03 U 001210 |
| 05 F 000771 | 13 V 001216 | 12 L 000238 |
| 03 L 001260 | 13 S 000732 | 16 Z 001375 |
| 07 Z 001966 | 15 H 001204 | 16 G 000455 |
| 05 J 001962 | 04 Y 001135 | 05 X 001198 |
| 01 M 001863 | 12 D 001613 | 17 Z 000333 |
| 16 R 000649 | 03 Q 000398 | 07 B 000920 |
| 06 T 001080 | 08 C 000380 | 05 E 000979 |
| 10 H 001976 | 14 Q 000968 | 17 D 000217 |
| 14 H 000698 | 12 J 000902 | 09 D 000169 |
| 03 Q 000304 | 04 G 001379 | 02 C 000859 |
| 11 P 001707 | 09 E 001608 | 10 H 001176 |
| 02 B 000201 | 05 Z 000776 | 05 O 001210 |
| 10 Y 001578 | 12 H 000694 | 05 M 000225 |
| 08 L 001795 | 16 M 001413 | 10 O 000089 |
| 04 M 001844 | 10 Q 001797 | 02 D 000745 |
| 03 O 000763 | 05 T 001066 | 12 W 001529 |
| 14 T 001139 | 16 Q 000115 | 02 E 001368 |
| 06 A 000639 | 16 G 001211 | 02 D 001781 |
| 12 J 001574 | 09 T 000647 | 13 P 000559 |
| 02 D 001789 | 09 M 001929 | |
| 09 U 000125 | 04 H 000994 | 01 B 001306 |
| 14 Q 000966 | 14 C 001721 | 09 Z 001716 |
| 15 P 001970 | 14 M 000304 | 14 A 001256 |
| 17 P 000216 | 14 U 001697 | 03 B 001106 |
| 02 U 000761 | 03 P 000665 | 04 M 001391 |
| 05 L 001772 | 14 D 000113 | 12 G 000417 |
| 05 P 001414 | 10 V 001373 | 02 O 000325 |
| 03 A 001367 | 01 T 000500 | 05 C 001460 |
| 01 K 000294 | 11 O 001415 | 08 S 001608 |
| 08 X 001107 | 06 G 001526 | 05 J 001834 |
| 14 K 000186 | 07 C 000667 | 04 B 000866 |
| 11 Y 000916 | 08 M 001844 | 01 W 001122 |
| 15 S 000415 | 01 W 001122 | 15 F 001125 |
| 15 J 001512 | 14 K 000457 | 15 Y 001736 |
| 06 N 001953 | 11 W 001331 | 10 O 001746 |
| 14 G 000783 | 05 D 000695 | 08 U 000274 |
| 13 U 000029 | 12 L 001656 | 01 D 001561 |
| 14 Z 000023 | 04 E 001774 | 14 T 000231 |
| 07 R 000133 | 01 N 000953 | 10 E 000049 |
| 04 W 000300 | 09 W 001948 | 16 B 000868 |
| 17 J 000936 | 01 M 001840 | 15 A 001068 |
| 01 Q 000942 | 14 J 000072 | 05 F 001501 |
| 15 R 000602 | 08 A 001663 | 15 H 001034 |
| 01 V 000019 | 16 M 000629 | 04 F 000841 |
| 14 L 000369 | 17 U 000972 | 06 H 001883 |
| 14 E 000516 | 03 G 001919 | 11 E 001692 |
| 16 Z 001444 | 03 S 000630 | 15 H 001932 |
| 11 G 001705 | 06 B 001807 | 02 A 000235 |
| 07 G 000897 | 10 G 001425 | 15 V 000563 |
| 10 R 001506 | 15 D 000541 | 04 P 000260 |
| 06 U 000416 | 10 M 000453 | 06 K 001934 |
| 02 L 001530 | 09 P 001192 | 06 K 001106 |
| 13 B 001678 | 10 C 001834 | 15 B 001437 |
| 15 H 001461 | 16 A 000507 | 14 B 000478 |
| 10 A 001939 | 14 S 000610 | 01 Y 001308 |
| 08 Y 001767 | 09 Q 000176 | 15 C 001506 |
| 02 S 000651 | 07 W 001623 | 15 M 000265 |
| 09 W 000916 | 02 S 001768 | 02 V 001701 |
| 03 P 001525 | 03 Y 001449 | 03 B 000570 |
| | 08 Y 000025 | |

இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

கள் மத்தியில் வன்முறைகள் பற்றிப் பேசியதாகக் கூறப்படுகின்றது. இதுபற்றி தீவிர நடவடிக்கை எடுப்பது பற்றி அரசாங்கம் ஆலோசனை நடத்திவருகின்றது.

நேற்றுக் கொழும்பில்

---

கோட்டை, செவ்.

நாவோதய கல்வி உபகாரப் பணத்தில் கல்விகற்க இவ்வருடம் 3000 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இதற்கான பரீட்சை இவ்வருடம் ஜூன் 18ம் திகதி நடைபெறும்

## ஈழநாடு

**வார மலர்**

**(6—2—70)**

0 எதிர்நீச்சல் (சிறுகதை)

0 யாருக்குச் சொந்தம்? (சின்னஞ் சிறுகதை

0 சந்திரப் பயணம்-6 அப்பலோ புறப்படுவது எப்படி?

0 வெண்ணிலாப் பயணம் போவோம். (கவிதை)

0 ஆழ்கடலில் அதிசய மாளிகை

0 தேவாரத் திருவமுது

0 ஹோமியோபதி வைத்தியம் தோன்றியது எங்ஙனம்?

0 சங்கமத்துறை (புதிய அம்சம்)

0 ஏழு நூற்றுண்டு காலத்துக்குமுன் சிருஷ்டிக்கப்பட்ட நகரம்.

0 இரு தீவுகள் இணைந்த இரணைதீவு

0 டாக்ஸிசாரதிகள்பிரச்னை

0 வட-கிழக்கில் விவசாயம் வளம்பெற வழி?

0 மிளகாய், நீ எங்கே?

0 வீரசைவர்கள் யார்?

இவைதவிர கலைஅரங்கம், குடும்பச் சுடர் மற்றும் வழமையான அம்சங்களுடன் வெளிவரும் 6-2-70 'ஈழநாடு' வாரமலரில்

**'மேயர் பதவியும் நள்ளிரவு நாடகமும்'**

பற்றி அரசியல் நிருபர் எழுதும் வாரசாரமும் வெளிவருகிறது.

யதாகக் கூறப்படுகின்றது.

அரசாங்கம் நமது போராட்டங்களை நசுக்குவதற்கு வன்முறைகளைப் பயன்படுத்தினால் அதே வழியில் நாம் அவர்களுக்குப் பதிலளிக்க வேண்டும். எம்மிடமும் வீரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நமது லட்சியத்திற்காகப் போராடமட்டுமல்ல லட்சியத்திற்காக உயிரைப் பணயம் வைக்கவும் தயாராய் இருக்கிறார்கள் என்று திரு. தம்பு நேற்றைய கூட்டத்தில் பேசியதாகக் கூறப்படுகிறது.

எமது அங்கத்தவர் எவராவது கொல்லப்பட்டால்

களும், சேனநாயக்கா அரசாங்கத்தின் உள்ளூர் முதலாளிகளும் தான் இந்த ஏஜெண்டுகளென்றும் குறிப்பிட்டாரம்

வர்த்தக ஊழியர் சங்க வேலைநிறுத்தம் மூன்றுவது நாளாக இன்று தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. துறைமுகவேலை நிறுத்தம் 54-வது நாளாகத் தொடர்கின்றது. நகரில் அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறுமல் பொலிசாரும இராணுவத்தினரும் கண்காணித்து வருகின்றனர் இதுவரை எதுவித வன்முறைச் சம்பவமும் அறிவிக்கப்படவில்லை (சி பி ஏ)

---

மன்னர் சிப்பாய்கள் கொலை:

# மேலும் ஐவர் விடுதலை; ஜி. ஜி. ஆஜராவார்

தள்ளாடி, செவ்வாய்

மன்னரில் தாழ்வுப்பாடு கிராமத்தில் சமீபத்தில் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டது சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, கொலைக்குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டு மன்னர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அடையாள அணிவகுப்பின் பின் ஏழுபேர் விடுதலைசெய்யப்பட்டிருந்தனர். நேற்று மீண்டும் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்கறிஞர் திரு. செரிபிம் எதிரிகளின் சார்பில் ஆஜராகி வாதாடினர்.

இதன்பின் மேலும் ஐந்துபேரை நீதிபதி விடுதலை செய்தார்.

இப்போது எண்மர்மீது தான் விசாரணை நடைபெறுகிறது அடுத்த விசாரணையின்போது எதிரிகளின் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆஜராவாரென்று திரு. செரிபிம் தெரிவித்தார்.

மேல் விசாரணையை நீதிபதி அடுத்தமாதம் 2-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

### பொலிஸ் அதிபர் விரைவு

இதேசமயம் மன்னர் இராணுவத்தினரிடையில் அமைதியின்மை ஏற்பட்டிருப்பதாகவும் அங்கு அமைதிக்குப்பங்கம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படலாமென்றும் அச்சம் தெரிவித்துப் பொலிஸ் அதிபருக்குக்கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து நிலைமையை நேரில் ஆராய்தறிந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி வடபகுதிப் பொலிஸ் அதிபருக்குக்கிடைத்த உத்தரவைத்தொடர்ந்து வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இன்று மன்னருக்கு விரைந்தார்.

தள்ளாடி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் இவ்வாரத்தில் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்படலாமென்றும் அறியப்படுகிறது.

### குருகுல அமைக்க ஆலோசனை

கோப்பாய், செவ்வாய்

திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள சிவானந்த குருகுலம் போன்ற யாழ்ப்பாணத்திலும் நிறுவுவதற்கான ஆலோசனை நடைபெற்று வருகிறது.

அகில இலங்கை இந்து சமய விவகார ஆலோசனைச் சபையின் விசேஷ கூட்டமொன்றிலேயே மேற்படி திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், புதன்

0 சைக்கிள்களைத் தனிமையான இடத்திலோ அல்லது உங்கள் பார்வைக்கு அப்பாற்பட்ட இடத்திலோ பூட்டாது வைத்துச் செல்லாதீர்கள்.

இவ்வாறு சைக்கிள் சொந்தக் காரர்களையும் பாவிப்பாளர்களையும் யாழ்ப்பாணப் பொலிஸார் கோருகின்றனர்

தப பென்ஷனுக்கென இரண்டுசத வீதமும் விதவைகளுக்கும் பெற்றுரை இழப்பவர்களுக்குமான பென்ஷனுக்கென இரண்டு சத வீதமும் கழிக்கப்படுகின்றது. ஆனல் ஏனைய அரசாங்க

பி. டி. சில்வா தலைமையிலான சம்பளக்கமிஷன் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகின்றது. இது ஏற்கப்பட்டால், ஓய்வுபெறும் ஆசிரியர்களும் விதவைகளும் பெற்றுரை

இழக்கும் குழந்தைகளும் இப்பொழுது பெறுவதைவிட இரண்டுமடங்கு அதிகமான பென்ஷன் தொகையைப்பெறுவார்கள் என்று கருதப்படுகின்றது.

# இரவு நேரத்தில் யாழ். நகர் கொழும்பை விட மோசம்?

## சுற்றுலா வந்த பெண்களிடம் இளவட்டங்கள் சேட்டை

கொழும்பு, செவ்வாய்

இரவு நேரங்களில் கொழும்பு நகரைவிட மோசமாக யாழ்ப்பாண நகரம் மாறிக்கொண்டு வருகிறதாம். யாழ்ப்பாணத்தில் சுற்றுலாவுக்காகச் சென்று கொழும்பு திரும்பியுள்ள ஒரு பெண்பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் இவ்வாறு கவலையுடன் தெரிவிக்கிறார்கள்.

பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியாஸ்திரிகள் மடத்தைச் சேர்ந்த ஆசிரியைகளும் மாணவிகளும் அடங்கிய கோஷ்டியொன்று யாழ்ப்பாணத்தில் குறுகிய கால சுற்றுலாவொன்றுக்காகப் போய்இருந்தது. இவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்திலிருந்து 500 யார் தூரத்தில்வைத்து சைக்கிள்களில் வந்த இளவட்டங்களின் சேட்டைகளை எதிர்நோக்க நேர்ந்ததாம்.

இந்தச் சம்பவம்பற்றி பல பெற்றோர்களும் ஆசிரியர்களும் நமது நிருபரிடம் இதுபற்றித் தெரிவித்தார்கள்,

யாழ்ப்பாணத்தில் முக்கிய இடங்களைப் பார்த்துவிட்டு யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியாஸ்திரிகள் மடத்தில் தங்குவதற்காக இக்கோஷ்டியினர் போய்க்கொண்டிருந்தனர், அப்பொழுது இளைஞர்கள் கும்பல் ஒன்று வந்து இந்தப் பெண்களை கைகளில் பிடித்தும் தலைமயிரைப் பிடித்தும் இழுத்திருக்கிறார்கள்,

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இச்சம்பவம்குறித்து மனம் உடைந்துபோன இக்கோஷ்டியினர் பொலிசில் கூட புகார்செய்ய மனமில்லாமல் திரும்பிவிட்டார்கள், அவ்வளவுக்கு அவர்கள் அதிர்ச்சியடைந்து போனதாகக் கூறினர்கள்,

இவர்கள்பிரயாணம்செய்த பஸ்வண்டியிலும் அடிக்கடி கஷ்டம் கொடுத்தபோதிலும் தோலகட்டி ஆச்சிரமத்துக்கு சென்று திரும்புவதற்கு அவர்கள் தவறவில்லையாம்,

(சி. பி. ஏ)

'தமிழ்நாடு' கோரிய

## தியாகியின் குடும்பத்துக்கு உதவி

சென்னை, பெப். 3

தமிழ்நாடு என்று சென்னை ராஜ்யத்துக்கு பெயர் சூட்டவேண்டும் என்றுகோரி உண்ணுவிரதம் இருந்துஉயிர்நீத்த திரு. சங்கரலிங்க நடாரின்குடும்பத்துக்குதமிழ்நாடு அரசாங்கம் உதவி செய்ய முடிவுசெய்திருக்கின்றது. இதன்படி காலஞ்சென்ற திரு. சங்கரலிங்கம் நாடாரின் துணைவியாருக்கு மாதம் ரூ. 150 வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு உத்தரவிட்டிருக்கின்றது.

# சுதந்திரதினம்

## கோலாகலமாக ஆரம்பமாகிறது

கோட்டை புதன்

தேவாலயங்களதும்கோவில்களதும் மணிகள் ஒலிக்க மங்கள் வாத்தியங்கள் முழங்க இலங்கையின் 22-வது சுதந்திர தினம் இன்று ஆரம்பமானது. இச்சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் பிரதான அம்சங்களான சமய, கலாச்சார நிகழ்ச்சிகள் யாவும் கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளன.

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிளயூ. தகநாயக்கா மங்கள பேரிகைகள முழங்க சுதந்திர சதுக்கத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தலைநகரின் பலபகுதிகளிலுமுள்ள ஆலயங்களில் விசேட பூஜைகளும் ஆராதனைகளும் நடைபெற்றன. காலிமுகத் திடலில் நடைபெற்ற முப்படைகளின் அணிவகுப்பை மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா ஏற்றார். பிரதமர், நீதியரசர்கள, செனட் சபைத் தலைவர், சபாநாயகர் ஆகியோரும் மற்றும் ஆட்சிமன்ற அங்கத்தவர்கள பலரும் பிரசன்னமாயிருந்தனர்

வற்றைத் தொடர்ந்து இன்று மாலை கல்வி கலாச்சார அமைச்சினல் ஒழுங்கு செய்யப்பட்ட சிறுவர் நிகழ்ச்சியும் சுதந்திரமண்டபத்தில் கலாச்சார நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

### பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர்

கொழும்பு, செவ்வாய்

கைதுசெய்யப்பட்ட ஒருவரை விடுவிப்பதற்காக ஆயுதம் தாங்கிய நூறுபேர் கொண்டு கூட்டமொன்று பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டதாம்.

தங்காலைக்கு அருகில் ஹங்கமயில் இச்சம்பவம் நடந்தது. செய்தி கிடைத்ததும் அருகாமையிலுள்ள இன்னெரு பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸ் கோஷ்டியொன்று ஹங்கமைக்கு விரைந்து சென்று நிலைமையைச் சமாளித்தார். எறிகுண்டுகளையும் வேறு ஆயுதங்களையும் கொண்டு இந்த கூட்டத்தினர் ஹங்கம பொலிஸ் நிலையத்தைத் தாக்க எத்தனித்ததாம்.

சி. பி. ஏ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

குறுகிய காலம் பாவித்த நல்ல நிலைமையிலுள்ள 40 ஹோஸ் பவர் ஜோன்ஸன் அவுட்போட் என்ஜின் விற்பனைக்குண்டு. விலை ரூபா 8250/- வ. மங்களேஸ்வரன், வட்டு-மேற்கு வட்டுக்கோட்டை. 1815

க்றவல் கற்கள் சேர்க்காது மண்ணும் சிமெந்தும் மட்டுமே உபயோகித்து திடமாகச் செய்யப்பட்ட செங்கல்லின் அளவினையுடைய சுமார் 600 கொங்கிறீற் கற்கள், சுமார் 300 பெரிய கற்கள் பிறை, 67, கோவில் வீதி, யாழ்ப்பாணம்: 1808

### தேவை

விற்பனையாளர்;

பத்திரிகை, புத்தகம் விற்பனை செய்ய விற்பனையாளர் தேவை. கணக்கியல், தட்டெழுத்து அனுபவத்துடன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும், த. தம்பித்துரை அன் சன்ஸ், 84, லோறிஸ் வீதி, கொழும்பு-4. 1817

### தவறிவிட்டது

கூப்பன்கள், பாஸ்போர்ட்:

தியாகராசாவினதும், மகாலட்சுமியினதும் பாஸ்போர்ட்டுக்களும், தியாகராசா, மகாலட்சுமி, ரவீந்திரன், வாசு, ராசேந்திரன் ஆகியோரது கூப்பன்களும் யாழ்ப்பாணம் பெரியமார்க்கட்டில் வைத்து தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் திரு. சி எஸ். ரி. செல்லையா அடைவுகடை, 195, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1940

வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க

REGAL JAFFNA
Daily 10-30 4-45, 7 & 9-45, p.m
Rod Taylor, Yvette Mimieux
in
THE MERCENARIES
(Adults only)


உதைபந்து நொக்கவுட் போட்டி

# பொலிஸ்கோஷ்டி வென்றது

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்க ஊழியர் விளையாட்டுச்சங்கத்தினால் நடாத்தப்படும் 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியில், யாழ் பொலிஸ்கோஷ்டி காங்கேசன்துறை சிமெந்து 'ஏ' பிரிவுக் கோஷ்டியை வென்றது.

இப்போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு கோஷ்டிகளும் சமபலத்துடன் மோதியவண்ணம் இருந்தன முதலில் பொலிஸ் கோஷ்டியினரே முதல் கோலைப் போட்டனர். இக் கோலைபொலிஸ்வீரர் கருணதாச மிகச்சாதுரியமாகப் போட்டார். இதைத்தொடர்ந்து சிமெந்துக் கோஷ்டியின் முன்னணி வீரர் சிவராசா மின்னல் வேகத்தில் ஒரு கோலைப் போட்டார். இடைவேளையின் போதுஇரு கோஷ்டிகளும் தலா 1-1 கோலைப் பெற்றிருந்தன.

இடைவேளையின் பின் போட்டி கடுமையாக இருந்தது. பொலிஸ் கோஷ்டியின் பின்னணி வீரர் சிலர் முரட்டுத்தனமாக விளையாடிய போதிலும், இக்கோஷ்டியின்முன்னணி வீரர்களின் ஆட்டம் பார்வையாளரை ரசிக்க வைத்தது.

இடைவேளையின் பின் பொலிஸ் கோஷ்டியினர் மேலும் இரு கோல்களைப் போட்டனர். இந்த இரு கோல்களையும் பொலிஸ் கோஷ்டியின் இடதுகரை வீரர் அன்ரனி மிகவேகமாகப் போட்டார். இதைதொடகந்து சிமெந்து கோஷ்டியின் இடதுகரை முன்னணி வீரர் நடராசா ஒரு கோலைப்போட்டார். ஆட்டமுடிவில் பொலிஸ் கோஷ்டடி 3--2 கோல்களால் சிமெந்து கோஷ்டியைத் தோற்கடிததது.

பொலிஸ் கோஷ்டியின் முன்னணிவீரர்கள் அன்ரனி கருணதாசா' அன்வர், முனசிங்க, பின்னணிவீரர்கள் மனன், நஸீர் ஆகியோரதும் சிமெந்துக் கோஷ்டியின் முன்னணி வீரர் சிவராசா, பின்னணி வீரர்கள் வடிவேஸ்வரன் சோமேஸ்வரன்' தவராசா ஆகியோரினதும் விளையாட்டு சிறப்பாக அமைந்திருந்தது.

யாழ். கோட்டை மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர் (தே. நி)

## சமவெற்றி ஈட்டின

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அர்ச். ஆரோக்கியநாதர் சனசமூக நிலைய உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், ஊர்காவற்றுறை 'றேஞ்சஸ்' கழகத்துக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இருகோஷ்டிகளும் தலா 2—2 கோல்களைப்போட்டமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஊர்காவற்றுறையில்நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. பி. சேவியர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். (தே. நி.)

கல்லூரிகிரிக்கெட்

## யாழ் மத்தி வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ் மத்திய கல்லூரி கிரிக்கட் கோஷ்டிக்கும் வட்டுக்கோட்டை'ஓல்ட்கோல்ட் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி இரண்டு அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

'ஓல்ட்கோல்ட்' கோஷ்டி இரண்டு இன்னிங்ஸிலும் முறையே 100,118 ஓட்டங்களைப் பெற்றன, யாழ் மத்தியகல்லூரிக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 169ஓட்டங்களைப்பெற்றது. இதில் ச ஜெயலிங்கம் 57 ஓட்டங்களை பெற்றுர். இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 54 ஓட்டங்களைப் பெற்றது. இப் போட்டி யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

# இன்றைய பலன்

தைமாதம் 22-ம் திகதி [4-2-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- கலைஉலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் பரவும். சிலர் புதிய வாகனத்தை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்துவர். வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

**ரிஷபம்**- எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும் தொழில்புரியும் இடத்தில் தொல்லைகள் முளைக்கக்கூடும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகுபவர்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். மட்டமான நாள்.

**மிதுனம்**- அரும்பியகாதல் இன்று கரும்புபோல் சுவைக்கும். பாரீர் விரும்பிய எண்ணம்போல நல்லவை நடககும் காணீர்.

**கடகம்**- முன்னேற்றத்தில் தடை ஏற்படும். சிறுபிணி வாட்டும். ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம்.

**சிம்மம்**- பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள். இதன் மூலம் பணமும் செலவாகும். அரசியல்வாதிகளுக்கு இன்று அதிஷ்டதினம்.

**கன்னி**- கடமையில் ஆர்வம் பிறக்கும். இதன்மூலம் புதியபாதை திறக்கும். வெளியிடத்து தொடர்புகளில் நல்ல திருப்பம் ஏற்படும்.

**துலாம்**- வரவில் உயர்வு காணும். வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும். அயலவர்களின் வாழ்த்தும் அவசியம் கிடைக்கும்.

**விருச்சிகம்**- நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். சகோத்ரவழியால் சஞ்சலத்திற்கும் இடம்உண்டு. உடல் நலம் சிறிது பாதிக்கம்படலாம்.

**தனுசு** அன்னியர்கள் மத்தியில் அதிகம் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். வயிற்றுக்கோளாறுகளுக்கு இடம் உண்டு. உணவு விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவும். சிலருக்கு நயனரோகமும் தென்படும்.

**மகரம்**- வார்த்தை ஜாலம் செய்வதன் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். எழுத்தாளர்களுக்கு சிறப்பான தினம். இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும். சிலருக்கு பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம்.

**கும்பம்**- மனையில் பூசல்கள் தோன்றிமறையும். தனிமையை விரும்புவீர்கள் தொழில்புரியும் இடத்தில் கண்துடைப்புவேலைகள் நடைபெறும், நண்பர்களே சூழ்ச்சி வலை விரிப்பதற்கு முற்படுவார்கள்.

**மீனம்**- நீண்டநாள் பிரச்னைக்கு இன்று நல்ல முடிவு ஏற்படும். தாய்வழிமூலம் தனவரவுக்கும் இடம்உண்டு. சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களும் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

## அண்ணு விழா

மல்லாகம், செவ்வாய்

குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் மன்றத்தினர் அண்ணு விழாவை இம்மாதம் 21-ம் திகதி மன்றத் திறந்த வெளியரங்கில் கொண்டாடவிருக்கின்றனர் சொற்பொழிவு, இன்னிசை, நடனம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்பு அம்சமாக விழாவில் இடம்பெறும்,

## வீனஸ்வெற்றி

மாவிட்டபுரம், செவ்

வலி-கிழக்கு விளையாட்டுக் கழக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கீழ் ஊரெழு விளையாட்டுக் கழககமும் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்ட போட்டியில் வீனஸ் வெற்றிபெற்றது.

சிங்கப்பூரில்

## 'நாதஸ்வரவித்துவான்' பத்மநாதன்

மாவிட்டபுரம், செவ்வாய்

நாகசுர கான கலாநிதி என். கே. பத்மநாதன் சிங்கப்பூர் சென்றுள்ளார். சிங்கப்பூர் செம்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்வதற்காக விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று இவர் அங்கு சென்றுள்ளார். அங்கிருந்து மலேஷியாவுக்கும் சென்று பல இடங்களிலும் கச்சேரி செய்வார்.

## இந்து-மகாஜனு மோதல்

### வெற்றிதோல்வி இல்லை

மல்லாகம், செவ்வாய்

தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரியும் யாழ்ப்பாணப் இந்துக்கல்லூரியும் கலந்து கொண்ட சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது போட்டி தெல்லிப்பழைமகாஜனு கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மகாஜனு தனது முதலாம் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 100 ஓட்டங்களை கைப்பற்றியது. யாழ் இந்துக்கல்லூரி வீரர் தனது முதலாம் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 122 ஓட்டங்களை பெற்றனர்.

மகாஜனு 2-ம் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 180 ஓட்டங்கள் எடுத்தது இதில் ஸ்கந்தராசா மட்டும் திறமையாக துடுப்பெடுத்தாடி 76 ஓட்டங்களை எடுத்திருந்தார். இந்துக்கல்லூரியினர் பின் இரண்டாம் இன்னிங்ஸில் 2 விக்கெட் நஷ்டத்திற்கு 33 ஓட்டங்களை மட்டும் எடுத்தது. ......

## வதிரி வெற்றி

வதிரிடயமண்ட் விளையாட்டுக் கழகத்திற்கும், யாழ் சம் சுன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே சிநேகித பூர்வமான உதை பந்தாட்ட மோதல் நடைபெற்றது. இம் மோதலில் வதிரி கோஷ்டி 5-4 கோல்களால் யாழ் சம் சுன் விளையாட்டுக் கோஷ்டியை வெற்றியீட்டியது.

யாழ் ஜின்னு மைதானத்தில் இவ்வுதை பந்தாட்டப் போட்டி நடைபெற்றது

# ஊர்காவற்றுறையில் உள்ளூராட்சி விழா

## 8-ம் திகதி நடக்கிறது

மல்லாகம், செவ்வாய்

ஊர்காவற்றுறை பட்டின சபையின் உள்ளூராட்சி வார நிகழ்ச்சிகள் இம்மாதம் 8-ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. பட்டினசபை எல்லைக்குள் இருக்கும் கோவில், தேவாலயங்கள் முதலியவற்றில் இடம் பெறும் மதவழிபாட்டுடன் விழா ஆரம்பமாரும்.

தொழில் மகத்துவ தினமான இரண்டாம் மரம்நாட்டுதல், முடிக்குரிய காணிகள் துப்புரவு செய்தல், களைபிடுங்குதல் போன்றன நடைபெறும் மூன்ரும் தினம் சுகாதாரப் பிள்ளைகள் தெரியப்படுவதுடன் தேநீர்க் கடைகளில் சுத்தப் பரிசோதனை இடம்பெறும். நான்காம் நாள் சேரிப்பகுதி சுத்தம்செய்யப்படும், ஐந்தாம் நாள் குழந்தைகளுக்கான நூலகம் ஆரம்பிக்கப்படும் பொதுநூல் நிலையத்திற்கு பொதுமக்கள் இலவச நூல்கள் அன்பளிப்புச் செய்வர், புத்தகக் கண்காட்சி நடாத்தப்படும், ஆருவது தினம் கைப்பந்தாட்டம், கிளித்தட்டு, உதைபந்தாட்டம், சங்கீதம், நடனம், நாடகம் போன்ற கலாச்சாரப் போட்டிகள் நடைபெறும்,

இறுதிநாள் வீட்டுத்தோட்டங்களை பரிசோதனைசெய்து பரிசு வழங்குவதுடன் ஏழைகளுக்கு காலை உணவு பரிமாறப்படும். இறுதியில் பகிரங்கக்கூட்டம் இடம்பெறும்:

## தெல்லிப்பளையில்

மல்லாகம், செவ்வாய்

தெல்லிப்பளை கிராமசபையினர் உள்ளூராட்சி வாரத்தையிட்டு தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரியில் இம்மாதம் 18-ம் திகதி கலாச்சார நிகழ்ச்சிகளை நடாத்தவிருக்கின்றனர். சங்கீதம், நடனம், நாடகம், வில்லுப்பாட்டு ஆகிய நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறும்:

10 மைல் சைக்கிள் ஓட்டம், 5 மைல் மரதன் ஓட்டம், விநோதஉடை ஆகிய போட்டிகளும் நடாத்தப் படவிருக்கின்றது,

## புங்குடுதீவுக்கு குழாய் நீர்

### வேலைகள் விரைவில் ஆரம்பமாகும

ஊரதீவு, செவ்

புங்குடுதீவுக்குக் குழாய் மூலம் நீர் விநியோகம்செய்வதற்கு ஒதுக்கியிருந்த ஒன்றரை லட்சம் ரூபாய்க்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வேலைகள் ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னேடியாக கிராமசபைத் தலைவர் திரு. கா மதியாபரணம் ஒப்பந்தம் செய்து வேலையைப் பொறுப்பேற்பதற்குச் சம்மதித்து இலாகாவுக் குக்கடிதய் எழுதியுள்ளார்.

வேலையை ஆரம்பித்துக் கூடிய விரைவில் தண்ணீர் வழங்குவதற்குரிய வேலைகளைத் தீவிரமாக ஆரம்பிப்பதற்கு தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வ. நவரத்தினம் நடவடிக்கை எடுத்துவருகிருர்.

## வெளியேறியவர் அல்ல

யாழ்ப்பாணம், செவ்வாய்

நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் கொழும்புத்துறை, நல்லூர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் இருந்து பயிற்சி பெற்று வெளியேறியவர்களின் விபரம்என பிரசுரமாகியிருந்த செய்தியில், கலாசாலையில் இரண்டு வருடப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள்'' என இருக்கவேண்டும். 7-1-70 லிருந்து இவர்கள் பயிற்சி பெற்றுவருகின்றனர்.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்) அசோகன் - சோ - சந்திரபாபு
[தினசரி 3 காட்சிகள்] நடித்த

# அடிமைப் பெண்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கே. பி. சுந்தராம்பாள் - ஜெமினிகணேசன்
மற்றும் பலர் நடித்த

# ஒளவையார்

(புதிய கொப்பி)

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)
இன்று முதல்

# வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று
''பேசும்படத்தின்'' மூன்று விருதுகள் பெற்ற வெற்றிச்சித்திரம்
(1) சிறந்த படம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி)
(3) சிறந்த உபநடிகர் (பாலையா).
நாதஸ்வர இசை:
மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்




சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்

# தில்லானா மோகனாம்பாள்

ஈஸ்ட்மென் கலர்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்

---

பெற்றது.

## நியமனம்

மல்லாகம், செவ்வாய் யாழ்ப்பாண மாவட்ட சமூக சேவை ஆலோசனைச் சபைக்கு மல்லாகம் கிராம சபைத் தலைவர் திரு. வ. பொன்னம்பலம் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார். சமூக சேவை அமைச்சரினால் நியமனம் பெற்ற இவர் மூன்று வருட காலத்திற்கு கடமையாற்றுவார். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இச்சபை இயங்குகின்றது.

---

## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
இன்றுமட்டும்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
நடித்த

### ஆனந்தி

நாளை தொடக்கம்

### குடும்பத் தலைவன்

---

## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - விஜயகுமாரி
நடித்த

### பச்சை விளக்கு

---

வல்வெட்டித்துறை

## றஞ்சனா தியேட்டர்

தினசரி: 6-30, 9-30
போயா, பிரிபோயா 2-30

### அழகர் மலைக்கள்ளன்

---

## ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 10-00
ஆஷாபரேக் - ஹெலன்
நடித்த

### ஷிக்கார்


(ஈஸ்மன் கலர்-ஹிந்தி)
அத்துடன் 1968-ம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.

---

## MANOHARA

JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
TARZAN AND THE JUNGLE BOY
(Color & Scope)
டார்ஸனும் காட்டுப் பையனும்

---




பூவுலகின் எத்திசையிலும், லான்ட்மாஸ்டர் 150 ஒன்று நிச்சயமிருக்கக் காண்பீர்கள். பலமானது நம்பிக்கையானது. அமோக பணிகள் பல புரியவல்லது, நானிலமெங்கும் பரவிய சேவை வசதிகள் கொண்டது.


...கைய தகுதிகள் கொண்ட வலிமிகு பணியாளியின் உருவாக்கம் ஓர் இலங்கையரையே சாரும். ஆசிய நிலைமைகளை மனதிற் கொண்டு உருவான இவ்வுயர் படைப்பு இலங்கையில் 2000த்திற்கும் அதிகமான ...ளால் பாவிக்கப்படுகிறது. நாடெங்கிலும், பயிற்சி ... வேண்டிய உபகரணம் கொண்ட, சேவை நிலையங்கள் உதவி பின் கொண்டது. உங்கள் தேவைகளுக்குத்தக்கதாக வேண்டிய மேலதிக உபகரணங்கள், உறுப்புக்கள் வசதியும் கொண்டது லான்ட்மாஸ்டர்.

லான்ட்மாஸ்டர் 150, இலகுவாகச் செலுத்தக் கூடியது. வேண்டியபோது உழுதலைக் கூட்டலாம்.


உங்கள் வருவாய்க்குத் தகுந்த இலகுவான பணக் கட்டண வசதிகள் உள்ளன.



...ந்தும் சுற்றிகள் உருளைக்கிழங்கு, கரும்பு நிரையறுத்தல் மாற்றக் கூடிய அளவுகளில்



குழாய் மணிக்கு 6000 கலன் இறைக்கவல்லது. தூவல், நிமிர்த்தல் நீர்ப் பாய்ச்சலுக்குச் சிறந்தது.



நிலையான நிரைவெட்டி உழுசாலை 12'' — 18'' நிரையறுக்கவும் வித்து பந்தியை ஆயத்தப்படுத்தவும் மாற்றக்கூடியது.

# லான்ட்மாஸ்டர் 150 மாநிலத்தின் வலிமைமிகு தொழிலாளி

பிரவுண்ஸ் குறூப் இன்டஸ்ரீஸ் லிமிட்.

BG லான்ட்மாஸ்டர் 150

அத்திடிய வீதிக்கு அப்பால், இரத்மலானை. டெலி: 71-178

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELA NADU

சுதந்திரதின
சிறப்பிதழ்

# "உள்ளத்தில் கள்ளமில்லா உண்மை ஒளிபரவட்டும்"

## நாடு நமது! என்றநல்லெண்ணம் எல்லோரிடமும் இலங்கட்டும்

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு — அதில்
எல்லோரும் சமம் என்பதுறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே இந்தத்
தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே.

அடிமைத்தளையுள் ஆழ்ந்து விடுதலைதவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்ற பாரத தேசத்தைக் கண்டு மனம் வெதும்பி பாவாணன்பாரதி இப்படிப் பாடினான். தன்னுடு சுதந்திரம் பெற்றுத் தளையறுத்துச் சங்கு கொண்டு தரணியெலாம் கேட்க ஊதியகாலத்திலே அவர் உயிருடன் இருக்கவில்லை.

ஆனால் அவரது ''எங்கும் சுதந்திரம்'' பொய்க்கவி என்ற சொல்லில்லை என்பதற்கு பாரதம் மட்டுமல்ல பாரதத்தின் பக்கமெல்லாம் அமைந்திருந்த எல்லா நாடுகளுமே சுதந்திரம் பெற்றமை நிகர்சன உண்மையாகும்.

பாரதியின் கவிதா உணர்ச்சியிற் சிதறிய ஆசியே நம் நாடு சுதந்திரம் பெறுவதற்கு வாழ்த்தாக அமைந்ததென்றால் அது அறிவும் நிதானமும் உடையவர்கள் மறுக்க முடியாத கருத்தாகும்,

### ஈழத்தின் அரசியல்

இன்று நம்நாட்டை ஆளுகின்றோம் நமக்கு எவரும் அதிகாரிகளில்லை. நாமார்க்கும் குடியல்லோம் என்ற

### இருகட்சிகள்

ஈழநாடு சுதந்திரம்பெற்று 21 ஆண்டுகளின் நிறைவுடன் நிமிர்ந்து நிற்கின்றது இந்தக்காலத்துக்குள் இரு பெரும் அரசியற்கட்சிகள் நம்மைஆட்சி செய்திருக்கின்றன. அரசியற் கட்சிகளின் கொள்கைகள், அபிலாசைகளின் பிரதிபலிப்புகளாக நாட்டில்பலவேறுபிரச்சினைகளும் தோன்றியுள்ளன. நாட்டில் வாழுகின்ற பலமக்களினதும் எண்ணத்தையும் ஒன்றுகூட்டி ஒரே தேசிய ஒருமைப் பாட்டிற்கானவழிகளை இவ்விரு அரசியற்கட்சிகளும் ஆரம்பகாலத்தில் செய்யத்தவறி விட்டன. பொருளாதார சுதந்திரதின சுதந்திர மேம்பாட்டைப் பெருக்குவதற்கான ஆக்கத் திட்டங்களுக்குமேலாக, தத்தமது பலத்தைப் பெருக்கவும் மக்களை தம்பாலிழுக்கவும் தேவையானவை எவை யென்று கொள்வதிலுல் மட்டும்சுதந்திரம் பெற்றவர்கள் ஆகமாட்டோம்.

வான்முகில் வளாது பெய்க, மலிவளம் சுரக்க மன்னன். கோன்முறைஅரசு செய்க, குறைவிலா துயிர்

எவ்வளவோ சலுகைகள் பெற்றுள்ளனர் அவர்களுக்கெல்லயம் ஆட்சியினர்வழங்குகின்ற சலுகைகள் உண்மையில் பாரபட்சமானவை என்பதை பூதக்கண்ணுடி போட்டுப் பார்க்கத் தேவையில்லை. நிதானமாகவே ஒற்றைக்கண்ணுற்கூட பார்க்கக் கூடியதாகவுள்ளது. எனவே சுதந்திரத்தின் உட்பொருளை ஏனைய மக்கள் வேற்றுக்கண்ணுேடு பார்க்கின்றனர். இந்த நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் இங்கு வாழ்கின்ற பல இனத்தவர்களும் பாரபட்சமின்றிஒரே விதமான முறையிலேயே நடத்தப்பட்டனர்' அடிமை வாழ்விலே அடிமைகளாக ஒரேவிதமான துன்பத்தைப் பெற்றிருந்தோம். நமக்குள் எவ்வித பேதமும் இருக்கவில்லை. ஆனுல் சுதந்திரம் பெற்ற பின்னர் பிரிவினை மனப் பான்மை ஆழ வேரூன்றி விட்டது. அதைஅகற்றி எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்கின்ற கருத்து தோன்றுவதற்கு ஆட்சியினர் வழிகாண வேண்டும்.

### 22வது சுதந்திரதினம்

1948-ம் ஆண்டு மாசி மாதம் நாம் சுதந்திரம்பெற்றேம் நமது நாட்டில் தேசியக்கொடி பட்டொளி வீசி காற்றில் பறந்தது. நம்மை இந்த உலகநாடுகளெல்லாம் வாழ்த்தின. நாம் எவர்க்கும் அடிமையல்ல நாமிருக்கும் நாடு நமது நாடு என்றெல்லாம் கர்ச்சனை செய்தோம் பெருமிதப்பட்டோம் இந்த உணர்ச்சி அன்றைக்கிருந்து இன்றுவரை யெருகிவந்ததா இல்லை இன்ப உணர்ச்சி ஒரு சாராருக்கு மட்டும் பெருகியது, மற்றவர்கள் இதயங்கள் வற்றி வரண்டு விட்டன இது ஏன் என்று சிந்திக்க வேண்டும் இங்கு பலதிசையும் பரந்து செறிந்து வாழ்கின்றவர்கள் அனைவருமே

**- இ. நா. -**

சுதந்திரத்தை காக்க வேண்டும் இதை இப்பேகதாவது ஆழுகின்றவர்கள் உணர்ந்துள்ளமை ஓரளவுக்கு நன்மைக்குரிய அறிகுறியென்றே கருதலாம்.

சிறுபான்மை மக்கள் இந்த நாட்டில் கௌரவிக்கப்பட்ட பிரஜைகளாக தேசியப்பற்றுடன் வாழவேண்டுமென்பதை உணர்ந்து புரிகின்ற ஆக்கமான காரியங்கள்தான் உண்மையான சுதந்திரத்துக்கு அத்திபாரமிட வல்லன.

காலம் மாறும் காலத்துடன் சேர்ந்தநல்ல கருத்துக்கள் மாறமாட்டா. காலத்தை அனுசரிக்கின்ற போலிப் பண்புகள ஒரு நாள் பல்லிளித்து விடும். யாகவே நல்லகாரியத்தை சாதிக்க நாட்டவர்கள் ஆக்கப்படவேண்டும்.

இருபத்திரண்டாவது சுதந்திரதினம் இன்றைக்குக் கொண்டாடப்படுகின்றது எங்கும் நமது ஈழமணித் தாய்க்கு அஞ்சலி செய்கின்றனர். இந்த அஞ்சலிமனத்தின் நிறைவுடன் எழவேண்டும் உண்மை உயிரோடு ஒன்றவேண்டும். உரைக்கும் உள்ளத்துக்கும் ஒருமைப்பாடுவேண்டும்' அப்போது தான் ஆண்டவன் ஆசிகிடைக்கும்.

அதிகாரிகளைத் திருப்தி செய்வதும், பணியாளர்களைக்கௌரவிப்பதும் விழாவாக அமையக்கூடாது. நமது நாடு நாம் இலங்கையர் நமக்கு நாமே மன்னர்கள் என்ற கருத்து வலிமையடையவழி வகுக்கவேண்டும். தேசியம் எங்கும் செறியவேண்டும்' இதற்கான சிந்தனை நம்மவரிடம் ஓங்கட்டும்! நாடெங்கும் லம் வளரட்டும்,

வாழ்கநம் ஈழமாதா!,
வளம்பல பெருக்கி, இன்பம்
நாளெலாம் செறிந்தே
ஓங்க, நல்லவர் வல்லோர்
ஏத்த, ஏழைகள் இல்லை
என்ற, இனியநல் இன்பம்
பூக்க, வாழிநம் நாடு வற்ரு,
வளத்துடன் வாழி வாழி.

# ...ரதினம் கொண்டாடும் காரணம்

**சுதந்திரதினம் என்று நாம் இன்று! கொண்டாடுவது ஏன்? இருந்த சுதந்திரத்தை இழந்தபடியால்தானே! பிரிட்டனில் சுதந்திர தினம் கொண்டாடப்படுவதில்லை, ஏனென்றல் பிரித்தானியர் ஒருபோதும் சுதந்திரத்தை இழக்கவில்லை. அதற்கு மாருக அவர்கள் பிறநாடுகளின் சுதந்திரத்தைப் பறிமுதல் செய்தபடியால்தான் அந்த நாடுகளில் சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறது.**

**இலங்கையின் சுதந்திரம் பறிபோனது ஒரு பெரிய துக்க கீதம். ஒரு 'காட்டிக் கொடுத்த காதை'. ஒரே ஜாதியினரிடையே உண்டான ஒற்றுமைப்பங்கம், பிரித்தாளும் நரித் தந்திரம் அனைத்தையுமே எமது சுதந்திர இழப்பில் காணலாம்.**

**சரித்திர நிகழச்சிகள் திரும்பத் திரும்ப வந்து கொண்டேயிருக்கும் என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதுவும் அரசியல் நிகழ்ச்சிகள் அசலாக மறுபடியும் வந்துகொண்டேயிருக்கும். இன்றைய சூழ்நிலையிலும் இதை எல்லோரும் மனத்தில் பதித்துக் கொள்ளுவது அவசியமானது.**

போர்த்துக்கேயரோ ஒல்லாந்தரோ அல்லது ஆங்கிலேயரோ தன்னும் 1815ம் ஆண்டுவரை இலங்கையை முற்ருக அடிமைப்படுத்த முடியவில்லை. கரையோரப் பகுதிகளை மட்டுமே பிடித்து வைத்திருந்தனர். பின்பு படிப்படியாக யாழ்ப்பாண அரசும், வன்னியர் அரசும் அவர்கள் கைக்குள் சிக்கின.

ஆனுல் கண்டி ராஜ்யம் ஒன்றை மட்டும் எவராலும் ஜெயிக்க முடியவில்லை தெருப்பாதைகளும் ரயில் பாதைகளும் இல்லாத அந்த நாட்களில் கண்டியைப் பிடிப்பது இலகுவான காரியமன்று. 1796ம் ஆண்டில் ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் கரையோரப்பகுதிகளில் மட்டுமே ஆட்சி புரிந்தனர். கண்டி ராஜ்யம் பழைய இலங்கை அரசவம்சத்துக்கு உட்பட்டிருந்தது.

அக்காலத்தில் மக்கள் அரசனை தெய்வமெனப் போற்றினர். அரசனுக்கு ஆலோசனை கூற மந்திரிகள் இருந்தனர் இவர்களை அதிகாரங்கள் அல்லது பிரதானிகள் என்று அழைத்தனர். கண்டியின் கடைசி மன்னனுகிய ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனுக்குபிலிமத்தலாவைஎன்பவன் முதலாம் அதிகாரமாயிருந்தான். இவனுக்கு அரியாசனத்தில் ஆசை பிறந்தது. பற்பல சூழ்ச்சிகள் செய்தான். கொழும்பிலிருந்த ஆங்கிலேய கவர்னருடன் இரகசியத் தொடர்பு கொண்டு கண்டிமீது படையெடுக்கத் தூண்டினன். ஆனுல் ஆங்கிலேயர் கண்டியைப் பிடிக்க வேண்டும் என்பது அவனுடைய விருப்பமல்ல. அவர்களுடைய உதவியோடு ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனை அகற்றிவிட்டு தான் அரியாசனம் ஏற வேண்டும் என்பதே அவனுடைய எண்ணம்.

பிலிமத்தலாவையின் தூண்டுதலின்படி கண்டிமீது படையெடுத்த ஆங்கிலேயப் பட்டாளம் தோல்வியுற்றது. பிலிமத்தலாவை வேறு பல சூழ்ச்சிகளும் கலகங்களும் விளைவித்து ஒன்றும் பலனளிக்கவில்லை. மக்கள் அரசன் பக்கமிருந்தனர். ஈற்றில் அவனுடைய கரைச்சல் பொறுக்காமல் அவனை முதலாம் அதிகாரப் பதவியிலிருந்து நீக்கியதோடல்லாமல் அவனை சிரச்சேதம் செய்யும் துர்ப்பாக்கியமான நிலைக்கும் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் வரவேண்டி நேர்ந்தது.

முதலாம் அதிகாரம் பதவிக்கு பிலிமத்தலாவையின் மருமகனுகிய ஏலப்பொலை நியமிக்கப்பட்டான், இது அரசன் விருப்பமல்ல. மந்திரி பிரதானிகளின் தெரிவு என்பதால் அரசனும் ஏற்றுக் கொண்டான்.

ஏலப்பொலை 'தன் மூக்குப் போனுலும் எதிரிக்கு சகுனப் பிழையாக வேண்டும்' என்று கருத்துடையவன். பிரிட்டிஷ் கவர்ணர் பிறௌன்றிக் வந்தனர். கடைசியில் ஏலப்பொலையே நேரில் சென்று ஆங்கிலேயத் கவர்ணரை தூண்டினுன்.

தக்க நியாயமில்லாமல் கண்டி மீது படையெடுக்க மாட்டேன் என்று கூறியதும் ஏலப்பொலை அந்த 'தக்க நியாயங்களை' உருவாக்கினுன். கண்டியில்வியாபாரம் செய்து கொண்டிருந்த சுமார் பத்து ஆங்கிலேயர்கள் ஏலப்பொலையின்சூழ்ச்சியால் ஒற்றர் எனக் கைது செய்யப்பட்டு அவர்களுடைய சிரச்சேதம் செய்யப்பட்ட முண்டங்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

பிறௌன்றிக்குக்கு 'தக்க நியாயம்' கிடைத்துவிட்டது. ஆங்கிலேயப் படைகள் கண்டி மீது படையெடுத்தன. காடும் மலையும் நதிகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த கஷ்டமான பிரதேசங்களில் முன்னேறிச் செல்வதற்குஏலப்பொலையின் ஆட்கள் ஆங்காங்கே இருந்து ஆங்கிலேயப் படைகளுக்கு உதவி புரிந்தன.

1814-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14-ம் திகதி முன்பு எவராலும் கைப்பற்ற முடியாத கண்டி ராஜ்யம்ஆங்கிலேயர்வசமானது. ஏலப்பொலை தனக்கு உயர் பதவி கிடைக்கும் என்று நினைத்து ஏமாந்தான்,

கண்டி அரசனும் அவனுடன் சேர்ந்த சுமார் அறுபது தென்னிந்திய நாயக்கர் வம்சத்தவர்களும் 'கோர்ண் வாலிஸ்' என்ற கப்பலில்

## ஒரே பார்வையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் அரசியல்

இன்று நம்நாட்டை ஆளுகின்றோம் நமக்கு எவரும் அதிகாரிகளில்லை. நாமார்க்கும் குடியல்லோம் என்று தீவிரமான தேச உணர்ச்சியுடன் நிமிர்ந்து நிற்கின்றோம். இத்தகைய பெருமை கிடைத்து இருபத்தொரு ஆண்டுகள் காலக்கடலுள் சங்கமித்துவிட்டன.

இலங்கை இலங்கையருக்கே என்கின்ற இன்ப உணர்ச்சியெங்கும் பெருகி நிற்கின்றது. நம்மவரை நாமே ஆளுகின்றோம் நமக்குரிய பிரச்னைகள் நம்மாலே தீர்க்கப்பட்டுள்ளன. இது தான் சுதந்திரம். சுதந்திரம் நமது பிறப்புரிமையென்று பிரான்சிய அறிஞன் ரூசோ சொன்னது இந்தக்கருத்திற்ருனு? வெறுமனே நமக்குரிய நாட்டை நம்மவர் ஆங்சிபுரிந்து விட்டால் போதுமா? இத்தகைய கேள்வி இன்று எல்லோருடைய இதயத்திலும் எழுகின்றதை மறைத்துவிடாது.

மனித வாழ்க்கையென்பது உணர்ச்சிகளுக்கப்பால் உண்மையை மதிப்பதாகும் உணர்ச்சியும் நுகர்ச்சியும் தான் வாழ்க்கையாகாது. உண்மையான அன்பும் நேசமும் பணபும் எங்கு விரிந்து கிடக்கின்றதோ அதுதான் உண்மையான சுதந்திரம்பெற்றநாடாகும்.

டோம்.

வான்முகில் வளாது பெய்க, மலிவளம் சுரக்க மன்னன். கோன்முறைஅரசு செய்க, குறைவிலா துயிர்கள் வாழ, நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்விமல்க, மேன்மை கொ.......நீதி விளங்குக, உலகமெல்லாம்'

இப்படியொரு பாடல் பெரியபுராணத்திலே உண்டு உண்மையான ஒருதேசம் மேற்குறிப்பிட்ட பாடலின் இலக்கணமாக விளங்கும் போது பிரச்னைகள் இல்லையாகும்.

'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை'

என்பது ஔவையின் அரிய பாடலாகும். எந்தநாட்டிலும் எல்லோருக்கும் சுபீட்சம்பொதுவானல் அந்தநாட்டில் கேடெதுவும் அண்ட முடியாது. ஒற்றுமையின் அவசியத்தை உணராமல மக்களின் உணர்ச்சிகளைத் தட்டிவிட்டுக் கொண்டே கடந்த காலத்தில் நமது நாட்டை ஆட்சி செய்து வந்த கட்சிகள் செயல் புரிந்தன. இதனுல் இங்கேவாழுகின்ற எல்லா மக்களும் மன அமைதி பெற்ருர்கள் என்று கொள்ளமுடியாது. எல்லாம் எல்லாருக்கும் ஆகின்ற ஒரு காலதான் இன்பமான காலமாகும் அதற்காக நாம் செயல்புரியவேண்டும்

இந்தநாட்டில் வாழுகின்ற பெரும்பான்மை இனத்தவர்கள் சுதந்திரத்தின்பின்

# ஓரே பார்வையில் 22 வருட முன்னேற்றம்

இலங்கை சுதந்திரமடைந்து 22 வருடங்கள் ஆகின்றன. இக்காலப் பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சில இங்கு தரப்படுகின்றன:-

| | 1948 | 1970 |
|---|---|---|
| ஜனத் தொகை | 70 லட்சம் | 1கோடி 30லட்சம் |
| ஒரு சதுரமைலின் குடிப்பரம்பல் | 278 | 493 |
| ஆயுட்காலம் | 43.9 வயது | 65 வயது |
| பிறப்புவிகிதம்(1000க்கு) | 36.1 | 32.1 |
| இறப்பு " (1000க்கு) | 13.7 | 8.8 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | | ரூ. 859.71 கோடி (1968) |
| வருமானம் | ரூ. 500க்கு (குறைய) | ரூ. 820 (1968) |
| வாழ்க்கைத் தரம் | 100 | 137.4 |
| மொத்தகடன் | ரூ. 51.61 கோடி | ரூ. 700 கோடி |
| வேலையற்ருேர் தொகை | 66,650 | 500,000க்கும் கூட |
| ஏற்றுமதி | 81 | 121 (1968) |
| ஏற்றுமதி விலை | 72 | 101 |
| இறக்குமதி | 59 | 83 (1968) |
| இறக்குமதி விலை | 70 | 160 |
| வெளி இருப்பு முதல் | ரூ. 95.2 கோடி | ரூ. 35 கோடி |
| பாடசாலைகளின் எண்ணிக்கை | 6,000 | 10,000 |
| மாணவர்களின் எண்ணிக்கை | 1,000,000க்கும் குறைவு | 2,750,000 |

(சி.பி.ஏ.)



கிளிநொச்சியில் டேவிட்பிரௌன் டிராக்டர் விற்பனை செய்யும் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் புதிய கிளை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அப்பொழுதுஅங்கு பிரசன்னமாய் இருந்த பிரமுகர்கள்:

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் தலைவர் டாக்டர் கனகரட்ணம், ருேலன்ட்ஸ் (டிராக்டர்) ஸ்தாபனத்தின் தலைவர் திரு ரி. ஸ்ரீராமநாதன் ருேலன்ட்ஸ் ஸ்தாபனத்தின் விற்பனை டைரக்டர் திரு எல். ஏ, ஐ. டியூட்ரம், ருேலன்ட்ஸ் ஸ்தாபனத்தின் கூட்டு நிர்வாக டைரக்டர் திரு. ஆர். எம். கனகரட்ண துணைத் தலைவர் திரு. ஜி. எல். எஸ். ஆஸ்டின் ஆகியோர்.

பிழையாக வேண்டும்' என்று கருத்துடையவன். பிரிட்டிஷ் கவர்ணர் பிறெளன்றிக் என்பவன் இந்த வித்தியாசத்தை உணர்ந்து விட்டான். அதற்கு ஒத்தாசையாக ஏலப்பெலையின் ஆட்கள் கண்டிமீது படையெடுக்கும்படி அங்கிலேயருக்கு அடிக்கடி புத்திமதி சொல்லி

தென்னிந்திய நாயக்கர் வம்சத்தவர்களும் 'கோர்ண்வாலிஸ்' என்ற கப்பலில் வேலூருக்கு கொண்டுசெல்லப்பட்டனர். அவன் அங்கேயே மடிந்தான்.

ஏலப்பொலை மௌறீஷஸ் தீவுகளுக்கு நாடு கடத்தப்பட்டு அவனும் அங்கேயே மடிந்தான். [வி. என். பி.]

## எங்கும் சுதந்திர ஏற்றம் நிறைவுறும்

எங்கள் திருமணி
நாட்டை மனத்தினில்
ஏற்றித் துதித்திடுவோம்
தங்கும் குறைகளைத்
தாழ்த்தி நிறைவுகள்
ஓங்க வழியமைப்போம்—நலம்
தாங்கித் தலைநிமிர்வோம்!

நீதி வழியிலெம்
நீர்மை மிகுந்திட
நேர்மை நெறியமைப்போம்—துயர்
மோதிச் சுகம் எழ
முன்னவர் நன்மையை
முன்னி உயர்வடைவோம்—அதைப்
பன்னிப் பயன்பெறுவோம்.

எங்கும் சுதந்திர
ஏற்றம் நிறைவுற
இன்னல் துடைத்திடுவோம்—அதில்
பொங்கிப் புதுமைகள்
பூத்துச் சிரித்திட
பூவில் ஒளிபெறுவோம்—உயர்
பாவில் அதைப் புகழ்வோம்.

—கவியரசன்


சகலவிதமான மோட்டார்பழுது பார்ப்பதற்கும்
குறைந்த விலையில்
உதிரிப் பாகங்களைப் பெறுவதற்கும்
டேவிற் பிறவுண் ட்ராக்டர்களின்
உப விநியோகஸ்தர்களும்
மிற்சுபிசி பவர் றில்லர்
லெம்பிறெட்டர் ஸ்கூட்டர்
ஆகியவற்றிற்கு ஏஜண்டுகளுமான
றேட் அன் ருன்ஸ்போட் கம்பனி லிமிட்டெற்
(யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் ஏஜண்டுகளும், நிர்வாக கர்த்தாக்களும்)
47, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.



★ கவர்ச்சியான இழை
★ நீடிய பாவிப்பு
★ சொகுசான ஓட்டம்
★ உத்தரவாதமுள்ளவேலைப்பாடு
ஆகியவற்றிற்கு
உங்கள் தேய்ந்துபோன டயர்களை
எம்மிடம் புதுப்பியுங்கள்
நோர்தேன் இன்டஸ்ரீஸ்
டயர் நிரப்புபவர்கள்
8/1 ஸ்ரான்லி வீதி -- யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7158



தந்தி: யாழ்மெற்றல் தொலைபேசி எண்: 7049
யாழ் உலோகத் தொழிற்சாலை
உறுதியும் உத்தரவாதமுமுள்ள
★ கும்பகோணம் மூடம்
★ செம்பு
★ தாம்பாளம்
★ கிடாரம்
★ வங்காளம் சட்டி
★ இட்டலிச்சட்டி
ஆகியனவும்
வீட்டுப் பாவனைக் குரிய சகல யாழ் மார்க் அலுமினியப் பாத்திரங்களும் தயாரிப்பாளர்களும்
சில்லறை மொத்த விநியோகஸ்தர்களும்
கோயிலுக்குத் தேவையான திருவாசி, கொடிமரம் ஆகியனவும் மற்றும் சகல சாமான்களும் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்.
தொழிற்சாலை & கந்தோர்
250—254, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாண
ஐக்கிய வியாபார சங்க ஸ்தாபனத்தார்
★ பிறதர், பவ், ஸ்ருவர்ட் தையல் மெஷின்கள்
★ இளாஸியோ குளிர்சாதனப் பெட்டிகள்
★ லெம்பிறெட்டாஸ் கூட்டர்கள்
ஆகியவற்றிற்கு தாம் அதிகாரபூர்வமான விற்பனையாளர்களாக
நியமனம் பெற்றுள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் அறியத்தருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000-ம் ஆண்டில் பசிப்பிணி மனிதகுலத்தை சூறையாடுமா?

## ரஞ்சிதத்தின் இன்பவாழ்வின் இரகசியம் என்ன?

— ஆ. வேலாயுதம் —

நுவரெலியா தேயிலைத் தோட்டம் ஒன்றில் நெளிந்து வளைந்தோடும் அருவிகள் பசுமையான தேயிலைச் செடிகள். ஆங்காங்கே பத்துப் பதினைந்து அறைகள் கொண்ட லயன்கள். ஒரு சிற்ருேடையைக் கடந்தவுடன் ஒரு பத்து அறைகள் கொண்ட லயன். அதிலே மூன்ருவது அறை முனியாண்டியினுடையது. முனியாண்டிக்குமூன்று குழந்தைகள். மூத்தவள் ரஞ்சிதம். வயது 19. உருண்டு திரண்ட அங்கங்கள் கொண்ட அவள் நீண்ட தனது கூந்தலை பின்னிப் போட்டிருப்பாள். நெற்றியிலே நீல நிறத் திலகம் அவளது பருவ அழகை மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

அதற்கு அடுத்து மூன்ருவது அறையில் சின்னக்கண்ணு. சின்னக்கண்ணு தோட்டத் தொழிலாளி என்ருலும் தனது மகனை எஸ் எஸ் சி வரை படிக்க வைத்துவிட்டான். ரஞ்சிதம் தோட்டப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் போது பருவமடைந்தாள். அதோடு அவளதுபடிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

சின்னக்கண்ணுவின் மகன் சுந்தரம்வாட்டசாட்டமான வாலிபன். ஹட்டன் கல்லூரி ஒன்றில் ஹாஸ்டலில் தங்கி படித்து வந்தான். இப்போது பரீட்சையில் சித்தியானதும் வீட்டோடு இருந்து வேலை தேடிக் கொண்டிருக்கின்ருன். பத்திரிகை தவருமல் அவனுக்கு வரும். அதில் காணப்படும் 'வேலை தேவை' விளம்பரங்களுக்கு [illegible], விண்ணப்பம் செய்வதுதான் இப்போது அவனது வேலை.

ஒருநாள் ரஞ்சிதம் சுந்தரத்துக்கு தனது தங்கைமூலம் ஒரு சிறு கடிதத் துண்டை அனுப்பி வைத்திருந்தாள். அதில் அன்றைய பத்திரிகையை பார்க்க அனுப்பி வைக்கும்படி கேட்டிருந்தாள். சுந்தரமும் பத்திரிகையைக் கொடுத்து அனுப்பினுன்.

பத்திரிகை கொடுக்கல் வாங்கலில் ஆரம்பித்த நட்பு காதலாக மலர்ந்துவிட்டது. இனிசொல்லவா வேண்டும்? பருவ ஆசைகளை இருவரும் பரஸ்பரம் பரிமாறி மகிழ்ந்தனர்.

'அன்பே ரஞ்சிதம் உன்னை நினைத்து நினைத்து நேற்று இரவு முழுவதும் எனக்கு உறக்கமே இல்லை. சிறிது ... டிப் பிடித்து......விழித்துப் பார்த்தேன்'' என்று சுந்தரம் எழுதுவான்.

'அத்தான் பொறுத்துக் கொள்ளுங்கள் என் உடலும் உள்ளமும் உங்களைத் தவிர வேறு யாருக்குச் சொந்தம் ஆசை தீர அனுபவிக்கும் காலம்வரும்' என்று ரஞ்சிதம் எழுதுவாள்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் சுந்தரத்துக்கு கொழும்பிலிருந்து ஒரு கடிதம் வந்தது வேலைக்கு வரும்படிதான். குமாஸ்தா வேலை. மாதம் ரூ. 200 சம்பளம் பறந்தோடிப் போய் வேலையை ஒப்புக் கொண்டான்.

சுந்தரத்துக்கு ரஞ்சிதமில்லாமல் கொழும்பில்தனிமையாக வாழ முடியவில்லை கடிதம் எழுதினுன். அவளும் எந்த நிமிஷமும் வரத் தயார் என்று பதில்அனுப்பினுள். இருவரும் திட்டமிட்டபடி கொழும்பை நோக்கி ஒரு நாள் இரவோடு இரவாக ஓடி வந்து விட்டனர்

சுந்தரம் ரஞ்சிதத்தை வத்தளையிலுள்ள தனது உறவினர் ஒருவருடைய வீட்டில் தங்கவைத்தான். மறுநாள் இருவரும் கொழும்புக் கச்சேரிக்குச் சென்று பதிவுத் திருமணம் செய்து கொண்டனர்.

ரஞ்சிதத்தின் தகப்பன் முனியாண்டி தனது மகள் காணுமற்போனதைப் பற்றியும், தனது மகளுக்கும் சுந்தரத்துக்கும் இடையில் மலர்ந்திருந்த காதல் விவகாரத்தைப் பற்றி லயத்திலுள்ளவர்கள் சொன்னதாகவும் தோட்டத்துரை மூலம் பொலிஸில் முறைப்பாடு செய்தான்.

பொலிஸ் இளம் சோடியை தேடிப்பிடித்து மறுநாள் நீதவான் முன்னிலையில் நிறுத்தியது. இரு தரப்புப் பெற்ருேரினதும் சம்மதத்தின்பேரில் நீதவான் சுந்தரம்-ரஞ்சிதம் சோடியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

சிட்டுக்குருவி சிறகடித்துப் பறப்பதுபோல் இருவரும் ...

... பித்தனர்.

நாட்கள் பல உருண்டோடின......

ரஞ்சிதம் கர்ப்பமுற்ருள். குழந்தை பிறந்தது. மனோகரன் என்று நாமம் சூட்டினர். குழந்தை பிறந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. இருவரும் இளம் வயதினர். ஆசைகள் அடங்காத வயது. அத்தோடு கலியாணமாகி மறுமாதமே ரஞ்சிதம் கர்ப்பமுற்ருள். வாலிபச் சூடு இருவருக்கும் இன்னும் தணியவில்லை. சுந்தரத்துக்கு கிடைக்கும் வருமானத்தில் மனைவியையும், ஒரு குழந்தையையும் தான் நல்ல முறையில் காப்பாற்ற முடியும். மேலும் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டால் கஷ்டம் ஏற்படுமென்பதை இருவரும் உணர்ந்துகொண்டனர்.

பல நாட்கள் இருவரும் தனித்தனியாக உறங்கினர். ஆனுல் ஆசை விடவில்லை. ரஞ்சிதத்தின் அழகை அள்ளிப் பருகி இன்பம் காணத் துடியாய்த் துடித்தான் சுந்தரம். ஆனுல் அதேவேளையில் குடும்பப் பொறுப்பை உணர்ந்தவன். ஆசைகளை அடக்கிக்கொண்டு பெருமூச்சு விட்டுக்கொள்ளுவான் ஏனென்ருல் இருவருமே ஏதோ கொஞ்சம் படித்தவர்கள்.

ஒருநாள். பத்திரிகையில், 'குழந்தைகளை இடைவெளி விட்டுப் பெறுவது எப்படி? விபரங்களுக்கு எழுதுங்கள்: கடிதங்கள் இரகசியமாக வைக்கப்படும். குடும்பத் திட்டத் தகவல், 457 காலி வீதி, கொள்ளுப்பிட்டி'' என்ற விளம்பரத்தைக் கண்ணுற்ருன்.

உடனே ஒரு கடிதம் எழுதினுன். ''ஐயா, எனக்குத் திருமணமாகி ஒரு வருடமாகிறது என் குழந்தைக்கு மூன்று மாதங்கள் தான் ஆகிறது. நாங்கள் இருவரும் இளம் வயதினர்கள். குழந்தைகள் பிறக்காமல் இருக்கவும், அதேவேளையில் இல்லற இன்பத்தை அடையவும் குடும்பத் திட்டமுறை ...

... திட்ட தகவல்நிலையம் சகல குடும்பத்திட்ட முறைகளையும், மருந்து மற்றும் கருத்தடை உபகரணங்கள் வாங்கும் கிளினிக்குகளின் விபரப்பட்டியலையும் அனுப்பிவைத்தது.

இருவரும் அருகிலுள்ள குடும்பத்திட்ட கிளினிக்குக்குச் சென்று தங்களுக்கு பிடித்தமான குடும்பத்திட்ட முறையைக் கடைப்பிடித்துவருகின்றனர்.

இப்போது...?

குடும்பத்திட்டத் தகவல் பிரிவின் ஆலோசனைகளுடன் சுந்தரமும் ரஞ்சிதமும் இன்பமாக இல்லற வாழ்க்கையை நடத்துகின்றனர். அவர்களுடைய அருமை மகன் மனோகரன் எவ்வித நோய் நொடியும் இன்றி ஓடி ஓடி விளையாடித்திரிகின்ருன். ரஞ்சிதமும், நல்ல தேக சுகத்துடன் இருந்து வருகிருள்.

அதேவேளையில் அடுத்த வீட்டில் வசிக்கும் அமிர்தம் வருடா வருடம் குழந்தைகளைப் பெற்று உடல் மெலிந்து நோய்வாய்ப்பட்டு கஷ்டப்படுகிருள். இதைக்கண்டு பரிதாபப்பட்ட ரஞ்சிதம், தங்களது இன்ப வாழ்வின் இரகசியத்தை அவளிடம் சொல்லாமலில்லை. ஆனுல் அமிர்தம் தான் படிக்காத முட்டாளாயிற்றே! ஊராரின் ஆதாரமற்ற பயமுறுத்தல்களைக் கேட்டு, குடும்பததிட்டம் என்ருலே ஏதோ பேய், பிசாசு என்று பயந்து நடுங்குகிருள். இப்போது வயிற்றில் பத்தாவது வளர்ந்து வருகிறது. மற்ற ஒன்பதின் நிலைமையோ பரிதாபம்! பரிதாபம்! அவை வயிருர உணவுண்ட நாளே கிடையாது! அமிர்தமும் கணவனும் வாரத்தில் ஐந்து நாட்கள் முழுப்பட்டினி. இந்த நிலைமாற வேண்டுமானுல் அமிர்தம் இனியாவது குடும்பத்திட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். எனினும் அமிர்தத்தைப்போல முட்டாள் தனமாக இனிமேல் எந்த ஒரு பெண்ணும் துன் ...

---

நிமிடம்தோறும் பெருகி வரும் உலகமக்களின் பசியைப் போக்கும் பிரச்னை தான்இன்று பெரிய பிரச்னையாக இருக்கிறது. ஏதோ எல்லோருக்கும் ஒருவேளை வயிருரக் கஞ்சி வார்ப்பது தான் பசிப்பிணி தீர்க்கும் பணி எனக் கருதமுடியாது உலக மக்கள் அனைவரும் பூரண தேகாரோக்கியத்தோடு நோய்நொடியின்றி வாழும் அளவிற்கு போஷாக்கு நிறைந்த உணவு வகைகள் போதியளவு கிடைக்க வேண்டும். மக்கள் இனம் சுபருக்கம் அடையும் வேகத்தில் உலக நிலப்பரப்போ இயற்கை வளமோ விஸ்தாரமடைவதாக இல்லை. இந்த நிலையில் பிறக்கும்ஒவ்வொரு குழந்தையையும் போஷாக்கின்மையால் சாகவிடாமல் காக்கவேண்டிய பாரிய பொறுப்பு, நாளைய உலகத் தலைவர்களை எதிர்நோக்கியுள்ளது இந்த உண்மையை மறைக்க அல்லது மறுக்க முயல்வது நெருப்பை பஞ்சுப்பொதியால் மறைத்துவிட எத்தனிப்பதற்கு சமமான முட்டாள் தனமான செயலாகும்.

இருபதாண்டுகளுக்கு முன் பத்து ஏக்கர் நிலத்தில் ஒரு குடும்பம் குடியிருந்தது. இன்ருே ஓர் ஏக்கர் நிலத்தில் பத்துக் குடும்பங்கள் வாழ்ந்தாகவேண்டும். இந்த நிலையில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் பத்துப்பத்துபிள்ளைகள் பிறக்குமானுல் இன்னும் பத்தாண்டில் எத்துணை பயங்கரமான நெருக்கடிஏற்படலாம் என்பதை கற்பனை செய்தால், ஜனப்பெருக்கத்தின் பேராபத்தை ஓரளவு எடை போடலாம்.

பத்தாண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட இன்று உலகடங்கிலும் உணவு உற்பத்தியும் இதர முன்னேற்ற அபிவிருத்தித் திட்டங்களும்பன்மடங்கு முன்னேற்றம்அடைந்துள்ளன என்பது உண்மையே. ஆனுல் என்னசெய்யலாம், இந்த முன்னேற்றங்களை எல்லாம் மக்கள் பெருக்க முன்னேற்றம் அலாக்காத்தூக்கி எறிந்து வருகிறதே! இதுதான்இன்று உலகநாடுகளை உலுப்பிவரும் பெரிய தலையிடி!

பிரஸல்ஸ் பல்கலைக்கழகத்தில் உயிரியல், ரஸாயன, போஷாக்குப்பிரிவு பேராசிரியராகவும், ஐரோப்பிய அறிவியல் துறையின் உணவு விதிமுறை ஆய்வுப் பிரிவின் பணிப்பாளருமான ஈ. ஜே பிக்வுட் 'வேர்ல்ட் ஹெல்த்' என்ற சுகாதார சஞ்சிகைக்கு சமீபத்தில் அளித்த ஒரு பேட்டியின்போது 2000-ம் ஆண்டின்போது உலக உணவு ...

--- பேராசிரியர் ஈ. ஜே. பிக்வுட் ---

மக்களின் உணவுத்தேவைகள் அதிகரித்த அளவுவேகத்தில், உலக உணவுற்பத்தி இன்னமும் பூரணத்துவ வளர்ச்சிபெறவில்லைஎன்பது பேராசிரியரின் கருத்து அதிலும் மிருகப்புரதத்தின்தேவையைபூர்த்திசெய்வதுமிக பெரும் பிரச்னையாகத் தெரிகிறது. 1958-ம் ஆண்டளவில் உலகின் மிகப் புரதத் தேவை சுமார் 200 லட்சம் தொன்ருகும் என்று ஐ.நாவின் உணவு விவசாய நிறுவனம் மதிப்பீடு செய்தது. இன்னமும் சில ஆண்டுகளின் பின் மிருகப்புரதத்தேவை 400 லட்சம் தொன்ருக அதிகரிக்கும். இந்த நூற்ருண்டின் முடிவிற்குள் சுமார் 600 லட்சம் தொன் மிருகப் புரதம் உலகமக்களை போஷிக்கத் தேவைப்படலாம். ஆகவே மிருகப்புரத உற்பத்தி விரைவில் மும்மடங்காக அதிகரிக்கவேண்டும். பாரம்பரிய விவசாய முறைகளினுல்இப்படியொரு அதீத உற்பத்திப் பெருக்கத்தை ஏற்படுத்துதல் சாத்தியமல்ல.

இதேபோலத்தான், மனித குலத்திற்கு தேவையான இதர உணவு, உடை ஆதியாம் அம்சங்களின் தேவைகளும் நிமிடம் தோறும் பெருகிவருகின்றன. இத்தேவைகளை சமாளிப்பதற்கு சர்வதேச நிறுவனங்களும் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களும் அரும்பாடுபட்டு உழைக்கத்தான் செய்கிருர்கள்.

பெருகி வரும் ஜனத்தொகையை பசிப்பிணியிலிருந்து காப்பாற்ற செயற்கை உணவு ரகங்களை கண்டுபிடிக்கும் புதுமையான முயற்சியும் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெட்ரோலியம், கடல்நீர், கடற்பசி போன்றவற்றிலிருந்து உணவுச் சத்துக்களை தயாரிக்கும் திட்டங்கள் நாளடைவில் நிச்சயம் வெற்றிபெறும்.

எனினும் எத்துணைதான் உணவுற்பத்தித்துறை முன்னேறி வந்தாலும் கூட, மனித இனப்பெருக்கம்ஓரளவாவது கட்டுப்படுத்தப்படாவிட்டால் முடிவு மிகப் பயங்கரமாக இருக்கும்.''

இவ்வாறு பேராசிரியர் ஈ. ஜே. பிக்வுட் தனது பேட்டியின் போது குறிப்பிட்டுள்ளார்.

---

### பிள்ளைகளைப் பெறுமுன் சிந்தியுங்கள்!

0 ஒவ்வொரு பிள்ளையையும் நீங்கள் பெறும்போது, அந்தப் பிள்ளைக்கான சகல வசதிகளையும், அதாவது உணவு. உடை, வீடு, கல்வி, போன்றவற்றை உங்களால் குறைவின்றி அளிக்க முடியுமா என்று சிந்தித்துப் பாருங்கள்.

0 குடும்பத்திட்டம் எந்த ஒரு மதத்திற்கும் விரோதமானதோ, பாதகமானதே அல்ல. வருவாய்க்கு மீறி அளவற்ற குழந்தைகளைப் பெற்று அவதிப்படுங்கள் என்று எந்த ஒரு மதமும் போதிக்க வில்லை.

0 இலங்கை அடங்கிலும் வாழும் எல்லா இன, மத, சாதிகளைச் சேர்ந்த பெருந்தொகையான தம்பதிகள் இப்பொழுது குடும்பத் திட்ட முறைகளால் நன்மை அடைந்து வருகின்றனர்.

0 எமது நாட்டின் அல்லது தேசிய இனத்தின் பலம் ஜனத்தொகையில் தங்கி இருக்கவில்லை. எமது மக்களின் வாழ்வியல் தராதரத்திலேயே எமது நாட்டின் சக்தி தங்கியுள்ளது.

0 பொறுப்பற்ற முறையில் குழந்தைகளைப் பெறுவதால் நீங்கள் உங்களை மட்டும் கஷ்டத்திற்குள்ளாக்கவில்லை. இந்த நாட்டையும் பயங்கர பொருளாதார வீழ்ச்சியை நோக்கித்தள்ளுகிறீர்கள்.

0 மக்களின் நன்மைக்காக அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட ஒரு திட்டம் தான் குடும்பத் திட்டம்.

மகளிர் அத்தனை பேரும் குடும்பத்திட்டத்தைதங்கள் ...

### தெரிந்ததா?

உலகத்தில் ஒவ்வொரு நாளும் மூன்று லட்சத்து இருபத்திநாலாயிரம் (3,24,000) குழந்தைகள் பிறக்கின்றன, அதாவது ஒரு நிமிடத்திற்கு 252குழந்தைகள். அதாவது நான்கு விநாடிகளில் பதினைந்து குழந்தைகள் பிறந்துவிடுகின் ...

### குழந்தை பெறும் சுதந்திரம் வேண்டுமா?

சுதந்திரம் என்ற சொல் மிக இனிமையானது ஆனுல் சுலபமானதல்ல ஏனெனில் அதில் சுய கட்டுப்பாடு பொதிந்துகிடக்கிறது. சுய கட்டுப்பாடும், சுதந்திரமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப்போன்றவை. சுய கட்டுப்பாடு இல்லாத சுதந்திரம் ஒரு மாயத் தோற்றமே தவிர' உண்மையானதல்ல. சுதந்திரம் நமது பிறப்புரிமையானுல் சுய கட்டுப்பாடும் நமது பிறப்பின் கடமையாகவேண்டும்.

சுய கட்டுப்பாட்டிலிருந்தே அடக்கம், பண்பு தோன்றியுள்ளன. நாகரிகமும் அதிலிருந்தே முளைத்து வளர்ந்துவருகிறது. சுயகட்டுப்பாடு இல்லாத சமுதாயத்தில் நாகரிகம் ஏது? சுதந்திரம், சுய கட்டுப்பாடு என்ற வார்த்தைகளில் சுயம்பு தொனிப்பதைக் காணலாம். வெளியிலிருந்து திணிக்கப்படுவது சுதந்திரமாகாது. தன்னைத் தானே ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர்.

'அன்பே ரஞ்சிதம் உன்னை நினைத்து நினைத்து நேற்று இரவு முழுவதும் எனக்கு உறக்கமே இல்லை. சிறிது அயர்ந்தேன். என் அருகில் நீ அமர்ந்து இருந்தாய். கட்

விடுதலைசெய்து தீர்ப்பளித் தார்.

சிட்டுக்குருவி சிறகடித்துப் பறப்பதுபோல் இருவரும் வத்தளையில் வாடகைக்கு வீடொன்றை எடுத்து இல் லற இன்பத்தை நுகர ஆரம்

ரும் இளம் வயதினர்கள். குழந்தைகள் பிறக்காமல் இருக்கவும், அதேவேளையில் இல்லற இன்பத்தை அடை யவும் குடும்பத் திட்டமுறை களை அனுப்பிவையுங்கள்'' என்று எழுதினேன்.

மறு தபாலில் கு...பத்

பத்திட்டத்தைக் கடைப் பிடிக் வேண்டும். எனினும் அமிர்தத்தைப்போல முட் டாள் தனமாக இனிமேல் எந்த ஒரு பெண்ணும் துன் பப்படமாட்டாள் என்பது திண்ணம். ஏன் தெரியுமா? இப்போதுதான் தோட்ட

மகளிர் அத்தனை பேரும் குடும்பத்திட்டத்தைதங்கள் நாளாந்த வாழ்க்கையின் ஓர் அம்சமாகக் கருத ஆரம் பித்து விட்டனரே!

என்ற சுகாதார சஞ்சிகை க்கு சமீபத்தில் அளித்த ஒரு பேட்டியின்போது 2000-ம் ஆண்டின்போது உலக உணவு நிலைமைஎப்படியிருக்குமென் பதைத் தெளிவாக விளக்கி னர்.

திற்கு 252குழந்தைகள். அதாவது நான்கு விநாடி களில் பதினைந்து குழந் தைகள் பிறந்துவிடுகின் றன! தெரிந்ததா?

என்ற வார்த்தைகளில் சுயம்பு தொனிப்பதைக் காணலாம். வெளியிலிருந்து திணிக்கப்படுவது சுதந்திர மாகாது. தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ளும் மனிதனுக்குச் சுதந்திரம் அதுவாகவே வந்தடைகி றது.

# சுதந்திர ஈழமாதா வாழ்க !

எமது நாட்டில் குடும்பத்திட்டம் தொண்டு ரீதியிலான சுகாதார சேவையாகும். இன்று உலகத்தில் பல முன்னேற்றமடைந்த நாடுகள் இச்சேவை யைக் கையாண்டு வருகின்றன. இச்சேவை யின் மூலம் பெற்றோர் தமக்குப்பிறக்கும் ஒவ்வொரு குழந் தையையும் தமக்கு வேண்டிய குழந்தைகளாகக் கருதுவ துடன், அக்குழந்தைக்கு வாழ்க்கையின் நன்மைகளையும், சௌகரியங்களையும் அனுபவிக்கும் வாய்ப்பையும் அளிக் கின்றனர்.

## நோக்கம்

1. போதுமான அளவு பிள்ளைகளைப்பெற்ற தம்பதிகள் தமது குடும்பத்தைக் கட்டுப்படுத்த உதவுதல்.
2. தம்பதிகள் தமது குழந்தைகளை தகுந்தகால இடை வெளியில்பெற உதவுதல். குறுகியகால இடைவெளியில் குழந்தைகளைப் பெறுதல் தாயினதும், குழந்தையினதும் நற்சுகத்தைப் பாதிக்கும்.
3. பிள்ளைகள் இல்லாமல் தவிக்கும் தம்பதிகளுக்கு பிள் ளைகள் பெறுவதற்குஉதவியளிப்பது.

உங்கள் ஊரில் உள்ள சகல அரசாங்க ஆஸ்பத்திரிகளி லும் குடும்பத்திட்டச் சாதனங்களும், சிகிச்சை வசதிக ளும் உள்ளன.

உங்களுக்குத் தெரிந்த மருத்துவ மாது; சுகா தாரப் பரிசோதகர் அல்லது டாக்டரிடம் கேளுங்கள். குடும்பத்திட்டத்தின் நன்மைகளைப் பற்றி அவர்கள் விளக்குவார்கள்.

**அல்லது**

**எம்மோடு உடனே**

**தொடர்புகொள்ளுங்கள்**

## பெற்றோர்களே!

குடும்பத்திட்ட முறைகளை நீங்களும் கடைப்பிடித்து விரும்பாத பிள்ளைப்பேற்றை தடைசெய்யுங்கள். ஒவ் வொரு பிள்ளைப்பேற்றுக்கும் இடையில் ஆகக்குறைந்தது மூன்றுவருடகாலமாவது இடைவெளி இருக்கவேண்டும். இப்பொழுது இலங்கை முழுவதிலும் 75.000 தம்பதிகள் குடும்பத்திட்ட முறைகளைக் கடைப்பிடித்து வருகின்ற னர். உங்கள் இருவருக்கும் குடும்பத்திட்ட ஆலோசனை களும்,முறைகளும் தேவைப்பட்டால் அருகிலுள்ள அர சாங்க ஆஸ்பத்திரிக்கு ஒருமுறை சென்று விசாரியுங்கள். அல்லது இரகசியமான பதிலைப்பெற எமக்கு எழுதுங்கள்.

**குடும்பத் திட்டத்தகவல்,**

457, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.

**நிம்மதியின் திறவுகோல்**

ஒவ்வொரு தாயும் சேயும் ஆரோக்கியமாகவும். ஆனநதமாகவும வாழ ஒரேவழி குடும்பத் திட்டம் தான்!

# குடும்பத்திட்டம் பற்றிய உண்மை!

**உங்கள் அபிமான தினசரிகள் வெளியிட்ட கருத்துகள் இதோ !**

## ★ ஈழநாடு

அதிக குழந்தைகளைப் பெற்று காப்பதற் கும் வகையில்லாமல் கைவிடவும் முடியா மல் பல குடும்பங்கள் தவிப்பது பகிரங்க ரகசியம். இலங்கையிலேயே அதிகக் குழந் தைகளைப் பெறும் எளிய குடும்பங்கள் எவ் விதம் தவிக்கின்றன என்பது பகிரங்க ரக சியம். அவர்களுக்கெல்லாம் இந்தக் குடும் பக்கட்டுப்பாடு இயக்கம் பெரிய வரப்பிர சாதமாகும். பலர் தாங்களாகவே முன் வந்து இனி குழந்தைகள் வேண்டாமென்று இந்த இயக்கத்தின் உதவிபெற்று முற்றுப் புள்ளி வைத்துக்கொள்கின்றார்கள். எனக் குத் தெரிந்த பல தமிழர் குடும்பக்கட்டுப் பாடு செய்துள்ளனர்.

— ஈழநாடு (ஐயாறன்) 28-10-69.

## ★ தினகரன்

நவ பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, ஐக்கிய அரபுக் குடியரசின் ஜனாதி பதி நாஸர், டிட்டோ, ஜோன்சன், மலே ஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் உட்பட 30உலக நாடுகளின்தலைவர்களும் பல்வேறு இன, மத, கலாச்சாரத்தைப் பின்பற்றும் பிரமுகர்களும் குடும்பத்திட் டம் பற்றிய கல்வி அறிவைப் பெறுவது அடிப்படைமனித உரிமைகளில் ஒன்று என்பதைத் தெளிவு படுத்தி உள்ளனர்.

— தினகரன் 25-11-69.

★ ★

## ★ வீரகேசரி

உணவு உற்பத்தி பல்கிப் பெருக வேண் டும். அல்லது ஜனத்தொகைப் பெருக்கம் கட்டுக்கடங்க வேண்டும். உணவுப் பெருக் கத்துக்கு ஒரு எல்லையுண்டு. தற்போது உள்ள ஜனத்தொகையின் பசியைத் தீர்க் கவே பகீரதப் பிரயத்தனங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இதைக் கவனிக்கும் பொழுது ஜனப்பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவதைத் தவிர வேறு வழி இருப்ப தாக நமக்குத் தெரியவில்லை. ஜனத்தைக் கட்டுப்படுத்துவது பாவமா இல்லையா என்ற பிரச்னைக்கு இடமில்லை. பாவ புண் ணியங்களைப் பற்றிக் கூறும் தத்துவங்களை யெல்லாம் மனிதன் நல்வாழ்வு வாழ வேண்டுமென்பதற்காக ஏற்பட்டவைகள் என்பதை நம் மனதில் கொண்டால் பாவ புண்ணியங்களைப்பற்றிய குழப்பம் தீர்ந்து விடும்.

— வீரகேசரி,
ஆசிரியதலையங்கம்-28-12-69.

# குடும்பத்திட்டத் தகவல் நிலையம்

**457,2 ம் மாடி, காலி வீதி, கொள்ளுப்பிட்டி கொழும்பு—3**

(கடிதத் தொடர்புகள் அந்தரங்கமாகக் கவனிக்கப்படும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேலியர் அரபுக்களிடமிருந்து

# பலவந்தமாகப் பறித்த பகுதிகளை பலவந்தமாகவே மீட்போம்

## அதிபர் நாஸர் மீண்டும் முழக்கம்

கெய்ரோ, பெப்.3

'பலாத்காரமாக அபகரித்த இடங்களை பலாத்காரத்தின் மூலமே திருப்பிப் பெறமுடியும் பேச்சுவார்த்தை என்பதெல்லாம் பூரணசரணாகதியையே குறிக்கும்' என்று ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர் கேணல் அப்துல் நாசர் கூறினார்.

வெளிநாட்டு ஆட்சிமன்ற உறுப்பினர்கள் மத்தியில் அதிபர் நாஸர் உரைநிகழ்த்தினார்.

இஸ்ரேலியருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதென்ற கருத்தை அவர் அடியோடு நிராகரித்தார். பெச்சுவார்த்தைகள் நடத்தினால் ஆது பூரணசரணாகதியைத்தான் குறிக்கும் என்றார் அதிபர் நாஸர்.

இஸ்ரேலியர் பலவந்தமாகப் பிடித்துக்கொண்ட பகுதிகளைப்பலவந்தமாகவே திருப்பி எடுப்போம். இதைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் இல்லை என்றார் அவர்.

அமெரிக்கா இஸ்ரேலியருக்கு ராணுவ ரீதியிலும் தார்மீக முறையிலும் ஆதரவளித்துவருகிறது என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

### நான்கு வல்லரசுகள் கூட்டம்

மற்காஸிய நிலைமை படுமோசமாகமாறி வருவதைத் தொடர்ந்து நேற்று நியூயோர்க்கில் நான்கு வல்லரசுகளின் பிரதிநிதிகளும் அவசரமாகக் கூடி ஆலோசனை நடத்தினர். பிரெஞ்சுத் தூதுவர் தமது அரசின் சார்பில் புதிய திட்டம் ஒன்றைத் தாக்கல் செய்ததாகத் தெரிகின்றது. இத்திட்டம் சம்பந்தமாக நான்கு வல்லரசுப் பிரதிநிதிகளுக்கிடையிலும் கருத்து ஒற்றுமை நிலவியதாகக் கூறப்பட்டபோதிலும் திட்டம் பற்றிய விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

## சிரியா எல்லையில் கடும் மோதல்

### 4 இஸ்ரேலிய விமானங்கள் சுடடு வீழ்த்தப்படடன

சிரியா எல்லையில் இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ள கோலான் மலைப்பகுதியில் நேற்று கடுமையான யுத்தம் நடைபெற்றது. நேற்றைய மோதல்களில் சிரியா படையினர் இஸ்ரேலியரின் நான்கு விமானங்களைச் சுட்டு வீழ்த்திவிட்டதாக அறிவித்தனர். இஸ்ரேலியரின் 3 டாங்கிகளையும் ஒரு ரடார் நிலையத்தையும் நொறுக்கித்தள்ளிவிட்டதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய பிரதேசத்தில் அத்துமீறித் தாக்குதல்களை சிரியா நடத்திவருவதாக இஸ்ரேலியர் ஐ. நா. பாதுகாப்புச்சபையிடம் புகார் கூறியிருக்கின்றனர்.

## ரயில் விபத்தில்

## சம்பந்த முதலியார் நினைவுதினம்

சென்னை, பெப்.2

நாடகப் பேராசிரியரான பம்மல் ஸ்ரீ சம்பந்த முதலியாரின் 98-வது நினைவு தினம் சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றத்தில் திரு டி.கே. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. திரு சண்முகம் தமது தலைமையுரையில் நாடகத்துறை நாட்டில் நலிவுற்ற வேளையில் புதுமையான நாடகங்களை எழுதி அதில் நடித்து தனியிடத்தைப் பெற்றவர் ஸ்ரீ சம்பந்த முதலியார் என்று கூறினார். இவ் விழாவில் சீமந்தினி என்ற சம்பந்த முதலியாரின் நாடக நூலை திரு. ச. ச. ஞானசம்பந்தன் வெளியிட்டார்.

திரு சிவஞானகிராமணியார் பேசும்போது கலைக்காக வாழ்ந்தவர் ஸ்ரீ சம்பந்த முதலியார் என்று குறிப்பிட்டார். திரு டி கே சண்முகம் சம்பந்த முதலியாரின் சிலையொன்றை சென்னையில் நிறுவ ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

## உடுப்பிட்டியில் சுதந்திரதின விழா

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டித்தொகுதியில் சுதந்திரதினக் கொண்டாட்டம் இமையாணனில்கொண்டாடப்படவிருக்கின்றது உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு மு. சிவசிதம்பரம் தலைமையில் இன்று மாலை 3மணிக்கு

தாளவாடி போராட்டம்

## வட்டல் நாகராஜ் பிணையில் விடுதலை

### கன்னடத்தில் தமிழருக்கு எதிராகப்போராட்டம்?

சென்னை, பெப். 3

தமிழ்நாட்டிலுள்ள தாளவாடி பகுதியை மைசூருடன் இணைக்கவேண்டும் என்று கோரிப் போராட்டம் நடத்த முயன்று கைதுசெய்யப்பட்ட வட்டல் நகாராஜ் இன்று மைசூருக்குக் கொண்டுபோகப்பட்டார். திரு. நாகராஜ் பிணையில் விடுதலைசெய்யப்பட்டிருக்கிறார்.

திரு. வட்டல் நாகராஜ் கைதுசெய்யப்பட்டது குறித்து னமசூர் சட்டசபை அங்கத்தவர்கள் கொண்டு வந்த பல உரிமைப்பிரனைகளுக்கு மைசூர் சட்டசபை சபாநாயகர் அனுமதிமறுத்துவிட்டார். திரு. நாகராஜை றிமாண்டில் வைத்த மாஜிஸ்டிரேட் மைசூர் அரசுக்கு அறிவிக்கத் தவறிவிட்டார் என்று கூறி சிலர் உரிமைப் பிரச்னையொன்றைக் கிளப்பினார்கள். திரு: வட்டல் நாகராஜ் கிரிமினல் குற்றத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார் என்றும் இதில் உரிமைப்பிரச்னை எதுவும் இல்லை என்றும் சபாநாயகர் தெரிவித்தார்,

இதற்கிடையில் தாளவாடி கிராமத்தை மைசூருடன் சேர்க்கவேண்டுமென்று கோரி கன்னடர்கள் விடுத்துள்ள கோரிக்கை நிறைவேருவிட்டால் கன்னடத்திலுள்ள தமிழருக்குஎதிராகப் போராட்டம் நடத்தப் போவதாகவும் அவர்கள் அறிவித்திருக்கின்றனர்,

கோவை மாவட்டத்தில் உள்ள தாளவாடி பகுதியை மைசூர் மாநிலத்துடன் சேர்க்கவேண்டுமென்று கோரி, மைசூர் எம். எல். ஏ வட்டல் நாகராஜ் தலைமையில் கன்னடர்கள் வன்முறைச்செயல்களிலீடுபட்டதும் அதையொட்டி 35 பேர் கைதுசெய்யப்பட்டதும் தெரிந்ததே.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கன்னடர் சங்கத்தைச்சேர்ந்த 3 உறுப்பினர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்

'கைதுசெய்யப்பட்ட வட்டல் நாகராஜையும் மற்றவர்களையும் விடுதலைசெய்ய வேண்டும். இல்லாவிட்டால் மைசூரில் தமிழர்கள்வாழும் பகுதிகளில், தமிழர்களுக்கெதிராகப் போராட்டம் நடத்துவோம்' என்று அந்த அறிக்கையில் மிரட்டியுள்ளனர்.

தாளவாடிக் கிராமம் கன்னத்துடன் இணைக்கப்படுமாஞல் கன்னடத்தில் தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டுமெனப் போராட்டம் நடத்தப்போவதாக திரு. ம. போ. சிவஞானக் கிராமணியார் அறிவித்திருக்கிருர்.

## கிளிநொச்சி வாலிபர் பொதுச்சங்கம்

கிளிநொச்சி, செவ்வாய்

## சதிக்கு இடம் கொடுக்க மாட்டோம்

மாவிட்டபுரம், செவ்

வாலிபர்களின் போராட்

## இரு அமைச்சர்கள் வருகின்றனர்!

மல்லாகம், செவ்வாய்

தேசிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் இருவர் இம்மாதம் மீண்டும் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கின்றனர்.

யாழ். நகரில் தேசிய இளைஞர் இயக்கத்தை ஆரம்பித்து வைக்க ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இம்மாதம் 18-ந்திகதி வடபகுதிவருகின்ருர்.

போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. பீ. எல். ஹுருள்ளே உத்தியோக ரீதியில் இம்மாதம் 23-ந்



செல்வி துவாரகா ஐயாத்துரையின் நடன நிகழ்ச்சி இன்று மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. ஜெயலக்ஷ்மி கந்தையா நட்டுவாங்கம் செய்வார்.

## டாக்ஸி வழிப்பறி: இருவர் சரண்

யாழ்ப்பாணம், செவ்

பிணன்ஸ் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தவில்லை என்பதற்காக கம்பனி உரிமையாளர்களால் பறிமுதல் செய்து கொண்டு செல்லப்பட்ட டாக்ஸி ஒன்றை மாங்குளத்தில் வழிமறித்து வழிப்பறி செய்ததாக சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டுவந்த இருவர் நீதிபதிமுன் சரணடைந்தனர்,

புறக்டர் தளையசிங்கம் யோகநாதனின் உதவியுடன் சரணடைந்த சந்தேகநபர்களை நீதிபதி தலா 750 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் இம்மாதம் 11ம் திகதி ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

இதுசம்பந்தமாக ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த செ. தியாகராசா, சுப்பிரமணியம் ஆகியோருக்கு நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்பு அவசியமில்லை என நீதிபதி உத்தரவிட்டதைத் தொடர்ந்து ரத்துச் செய்யப்பட்டது. அணிவகுப்பு தேவையில்லை என புறக்டர் தளையசிங்கம் யோகநாதன் வாதாடினர். வழிப்பறி செய்ய உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் டாக்ஸியும் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. விசாரணை வேருெரு திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## இ. போ. ச. பஸ்சாரதி இரக்கமின்றி நடந்தாராம்

### மேலதிகாரிகளுக்குப் புகார்

முல்லைத்தீவு, செவ்வாய்

முல்லைத்தீவு இ. போ. ச. அதிகாரிகளுக்குப் பிரயாணி லைத்தீவுக்கு அனுப்ப முயற்சித்தபோது மற்ற பஸ் கண்டக்டர் சம்மதித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவிட்டதாக அறிவித்தனர். இஸ்ரேலியரின் 3 டாங்கி காப்புச்சபையிடம் புகார் கூறியிருக்கின்றனர்.

# ரயில் விபத்தில் பலியானோர் 300 பேர்

புவனஸ் அயர்ஸ், பெப். 3 ஆர்ஜன் பீனவில் நேற்று முன்தினம் நிகழ்ந்த ரயில் விபத்தில் பலியானவர்களின் தொகை 300 ஆக அதிகரித்திருக்கின்றது. மேலும் 200 பேருக்குமேல் காயமடைந்திருக்கக்கூடுமென்றும் இவர்களில் அதிகமானவர்கள் படுகாயங்களுக்குள்ளாகியிருக்கவேண்டும் என்றும் அஞ்சப்படுகின்றது.

புவனஸ் அயர்ஸைநோக்கி 500பிரயாணிகளுடன் விரைந்து கொண்டிருந்த ஒரு பிரயாணிகள் வண்டி 700 உல்லாசப்பிரயாணிகளுடன் நின்றுகொண்டிருந்த மற்றொருவண்டியுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

டம் இமையாணனில்கொண்டாடப்படவிருக்கின்றது. உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு மு. சிவசிதம்பரம் தலைமையில் இன்று மாலை 3மணிக்கு சுதந்திரதின விழா நடைபெறும்.

எல்லே, கபாடி முதலிய தேசிய விளையாட்டுக்கள் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம்பெறுகின்றன. உடுப்பிட்டி வட்டார விளையாட்டுக் கல்வியதிகாரி திரு எஸ் கே. கார்த்திகேசு விளையாட்டுப் போட்டிகளுக்கான ஒழுங்குகளை செய்துள்ளார். இமையாணன் சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் இச் சுதந்திரதினவிழா கொண்டாடப்படுகின்றது.

# பிரிட்டிஷ் தத்துவ மேதை பேட்ரம் ரஸல் காலமானார்

லண்டன்பெப்.3 உலகின் செல்வாக்கு மிக்க தத்துவமேதைகளில் ஒருவராக விளங்கிய சேர் பேட்ரம் ரஸல் நேற்று காலமானார். வேல்ஸில் உள்ள அவரது சொந்த இல்லத்தில் மேதை ரஸல் உயிர்நீத்தார். மரணமாகையில் அவருக்கு வயது 97.

தத்துவத் துறையிலும் கணிதத் துறையிலும் பேராசிரியர் பேட்ரம் ரஸல் சிறந்து விளங்கினார்: உலகில் யுத்தம் எங்கு நடந்தாலும் அதனை வன்மையாகக் கண்டிக்கஅவர் தவறியதில்லை அமெரிக்காவின் வியட்னாம் கொள்கையைஅவர் வன்மையாக கண்டித்து வந்தார். சோவியத் யூனியனில் யூதர்கள் நடத்தப்பட்ட விதம் குறித்தும் அவர் கண்டித்திருக்கிறார்.

பேட்ரம் ரஸல் 40 நூல்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். இலக்கியத்துக்கான நோபல் பரிசையும் ஐ.நா. வின் கலிங்க பரிசையும் பெற்றிருக்கிறார். சமாதானத்துக்காக அவர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு இரண்டு தடவைகள் ஜெயில் தண்டனை பெற்றிருக்கிறார். பல்கலைக்கழகத்தில் தாம் வகித்த பதவிகளை இரண்டு தடவைகள் இழந்திருக்கிறார், அவர் தம் வாழ்க்கையில் நான்கு தடவைகள் திருமணம் செய்து கொண்டுள்ளார். கடைசியாக தமது 80-வது வயதில் திருமணம் செய்து கொண்டார்.

0 0

## கிளிநொச்சி வாலிபர் பொதுச்சங்கம்

கிளிநொச்சி, செவ்வாய் இயக்கச்சி, கே. வில்வயல், சங்கத்தார்வயல், முகாவில், கிளிநொச்சி, கணேசபுரம், ஜெயந்திநகர், திருநகர், உருத்திரபுரம், பரந்தன், குமரபுரம், முரசுமோட்டை, கண்டாவளை, தர்மபுரம், இராமநாதபுரம், வட்டக்கச்சி, ஆனையிறவு, பளை, புலோப்பளை, சோறன்பற்று, முள்ளியான், சுண்டிக்குளம், துணுக்காய், கல்விளான், பூநகரி, வலைப்பாடு, இரணைதீவு, கிராஞ்சி, பல்லவராயன்கட்டு, வன்னேரிக்குளம் என்னுமிடங்களிலுள்ள இளைஞர் சங்கங்கள், முன்னணிகள், சீர்திருத்த வாலிபர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி கிளிநொச்சி வாலிபர் பொதுச்சங்கம் ஒன்றை அமைத்தனர். கிளிநொச்சித் தொகுதியின் வருங்கால வளர்ச்சியையிட்டு இவர்கள் திரு. சி. என். மாணிக்கவேள் தலைமையில் கூடி ஆலோசித்தனர். பல பிரதிநிதிகள் தொகுதியின் அத்தியாவசிய தேவைகளையிட்டுப் பேசினர். எதிர்வரும் ஆட்சிமன்றத் தேர்தலில் இடதுசாரிக்கட்சியொன்றின் சார்பில் பட்டதாரி ஆசிரியரும் நெடுந்தீவைச் சேர்ந்தவருமான திரு. கே. கனகரத்தினத்தை கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடுமாறு கேட்டுக்கொள்வதெனக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## கொடுக்க மாட்டோம்

மாவிட்டபுரம், செவ் வாலிபர்களின் போராட்டத்தை திசைதிருப்ப முயலும் தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களால் திசைதிருப்பப்படுவார்கள் எமது இன மத கட்சிவேறுபாடற்றபோராட்டம் அவர்களது சதியினால் பாதிக்கப்படமாட்டாது.

இவ்வாறு அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் வாலிபர்கள் சங்க வட்டுக்கோட்டைக் கிளை அமைப்பு கூட்டத்தில்கலந்துகொண்ட சங்கச் செயளாலர் திரு. க குணேந்திரதாசன் கூறினார்.

'தமிழ்த்தலைவர்கள் இனவெறியைக் கிளப்பி எமது இன, மத, கட்சிவேறுபாடற்றபோராட்டத்தை அரசியல் லாபம் கருதி திசைதிருப்பப்பார்க்கிறார்கள். என்றுகூறிய அவர் தமிழ்மக்கள் தமது உரிமைகளை இழந்து 2ம் பிரஜையாக வாழ எப்படி திசைதிருப்பினார்களோ அதேமாதிரி எம்மையும்செய்வார்கள் ஆனால் நாம் இதற்கு இடம்கொடுக்காமல் எமதுஉரிமைபெற்று வேலையற்றோர் என்ற ஒரு பகுதியினர் நாட்டில் இல்லாமல் செய்யப் போராடியே தீருவோம் என்று கூறினார்.

திரு. செ. ஆரியகுமாரன் தலைவராகவும் க. புவனேந்திரன் உபதலைவராகவும் நா. செல்வராசா காரியதரிசியாகவும் ச.நடராச தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

7பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

## கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாகிகள்

மாவிட்டபுரம், செவ் தெல்லிப்பளை கூட்டுறவு ஐக்கிய வைத்தியசாலையின் பொதுக்கூட்டம் திரு. வ. சரவணமுத்து ஜே.பி. தலைமையில் நடைபெற்றது

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. சரவணமுத்து, உப- தலைவர்கள்: செனட்டர் நடராசா, மு. சின்னத்தம்பி, பி.ச. இராசசேகரம், வி. பொன்னம்பலம் (மல்லாகம் கி ச தலைவர்) சு. ஸ்ரீபாஸ்கரன் காரியதரிசி: திரு. த. சிவலிங்கம் ஜே.பி. தனாதிகாரி: திரு வே இராமநாதன். நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

18-ந்திகதி வடபகுதிவருகின்றார்.

போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. பீ. எல். ஹுருள்ளே உத்தியோகரீதியில் இம்மாதம் 23-ந் திகதி யாழ். நகருக்கு விஜயம் செய்வார்.

— —

## மகஜர் சமர்ப்பித்தனர்

கோப்பாய், செவ்வாய் அச்சுவேலி கிராமசபையினர் அங்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவிடம் நவீன சந்தை அமைப்பு, குழாய்நீர் விநியோகத் திட்டம், வெள்ள நிவாரணநிதி, முதலிய கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

மேற்படிக் கிராமசபைக்கு அமைச்சர் விஜயம் செய்ய முன்னர் அச்சுவேலி செல்வநாயகபுர வீட்டுத் திட்டத்தின் கீழ் 2-வது கட்டமாக அமைக்கப்பட்டுள்ள 54 வீடுகளையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

— —

## உடையாரை தாக்கினராம பிணையில் அனுமதி

உடுப்பிட்டி, செவ்வாய் கோர்ட் உத்தரவை நிறைவேற்ற வெலியாத்து உடையாரைத் தாக்கிய இருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர். உடுப்பிட்டிக் கோவிற்பற்று வெலியாத்து உடையார் திரு க வே. செல்லையாவே தாக்கப்பட்டவர்.

வல் வெட்டியில் வேலி வைப்பதற்காக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு கான்ஸ்டபிள்களுடன் சென்ற உடையாரை தாக்கிவிட்டு ஓட முயன்றவர்களை பொலிசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட வேலன் தங்கவேலன், வேலன் தேவராசா, கோவிந்தன் துரையன், வேலன் கைம்பெண் சின்னப்பிள்ளை ஆகியோர் மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

மாஜிஸ்டிரேட் திரு தர்மலிங்கம் எதிரிகளை தலா 700 ரூபா பிணையில் விட்டுள்ளார்.

......

## உதவினர்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் திரு. கே நல்லையா வெள்ள நிவாரண நிதிக்காக ரூபா 15 உதவியுள்ளார்

## இரக்கமின்றி நடந்தாராம் மேலதிகாரிகளுக்குப் புகார்

முல்லைத்தீவு, செவ்வாய் முல்லைத்தீவு இ. போ. ச. அதிகாரிகளுக்குப் பிரயாணிகளால் செய்யப்பட்ட புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததைக் கண்ட பிரஸ்தாப பிரயாணிகள் இதுபற்றி இ. போ. ச. தலைமை நிலைய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனராம்.

அண்மையில் புள்ளியாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுக்கு வந்துகொண்டிருந்த இ. போ ச. பஸ்ஸில் பிரயாணஞ்செய்த குறித்த பிரயாணிகள் தமக்கு ஏற்பட்ட கஷ்டமான அனுபவம் பற்றி முறையீட்டில் தெரிவித்திருந்தனராம்.

தாம் பிரயாணஞ்செய்த பஸ் இடைவழியில் நின்று போனதாகவும், அப்போது அங்கு வந்த நீர்கொழும்பு-முல்லைத்தீவு பஸ்ஸில், பழுதடைந்த பஸ்ஸின் கண்டக்டர் தங்களை ஏற்றி முல்லைத்தீவுக்கு அனுப்ப முயற்சித்தபோது மற்ற பஸ் கண்டக்டர் சம்மதித்து பஸ்ஸில் ஏற்றியதாகவும், ஆனால் குறித்த பஸ் சாரதி பஸ்ஸில் ஏறிய பிரயாணிகளை இரக்கமின்றி இறக்கிவிட்டதாகவும் புகாரில் தெரிவித்துள்ளனராம்.

## சமயபாட வகுப்புகள்

பண்டத்தரிப்பு, செவ் இளவாலை சென். ஜேம்ஸ் பங்கில் சமய பாட வகுப்புகளை நடாத்த மேற்படி பங்கு இளம் ஆண்களும் பெண்களும் முன்வந்துள்ளனர். போயா நாட்களில் இவ்வகுப்புகள் நடைபெறும் கட்டளைக்குரவர் வண. டெய்சி தலைமையில் சமய வகுப்புகளை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செய்திகள்: காலை 6-45, 8-00, 10-30.

பகல் 11-00, 12-45, 1-30.

மாலை 4-00, 5-00, 6-00.

இரவு 7-00, 8-00, 9-00, 10-30.

திரைகானம்: காலை 7-30.

காலை 8-30 சுதந்திரதின அணிவகுப்பு அஞ்சலி, 10-30 பொன்னம்பல வாணர் ஆலய விசேஷ பூசை அஞ்சல்.

பகல் 12-00 பிரதமரின் சுதந்திரதினச் செய்தி, 1-00 ஜும்மு பள்ளிவாசல் தொழுகை அஞ்சல்.

மாலை 3-45 நாதஸ்வரம், 4-03 மாணவர் உடற்பயிற்சி நிகழ்ச்சி அஞ்சல், 6-10 வெளிநாடுகளிலிருந்து ஆசிச்செய்திகள்.

இரவு 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-30 சித்திரம் — எங்கள் சுதந்திரம், 9-40 கர்னாடகஇசை — சத்தியபாமா இராஜலிங்கம்.

நாம் சுதந்திரம் பெற்ற நல்நாள் இந்தநாள்

புன்னகை பூக்கும் உங்களுக்கு பொன்னகை வேண்டாமா?

உங்கள் இதயங்கவர்ந்த நகைகளைப் பெற்றுக்கொள்ள

எம்மிடம் வாருங்கள்

தெய்வா நகை மாளிகை

173, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம். ...... தொலைபேசி: 512.

எங்கும் சுதந்திரம் என்று கொண்டாடும்

இந்த இனிய நாளிலே

உங்களுக்கு எமது வாழ்த்துகள்!

உங்கள் உள்ளம் கவர்ந்த

உந்தரவாதமும் உறுதியும்

உடைய நகைகளுக்குப்

பேர் பெற்றது நமது

ராணி ஆபரண மாளிகை

224, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சமயம், கர்மம், ஞானம் பக்தி என்பன ஒன்றுபட்டு வாழ்க்கையை ஒன்றுபடச்செய்வதே மதம். ஆத்மாவை உயர்ந்தநிலைக்குக் கொண்டுவருவதே சமயத்தின் கடமையாகும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம் 22-ந் திகதி (4-2-70)


## சுதந்திரதினம்

நமது நாடு அரசியல் விடுதலை பெற்று இன்றுடன் இருபத்திரண்டு ஆண்டுகளாகின்றன. அந்நியரின் ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்ற தினத்தை இன்று நாட்டுமக்கள் கொண்டாடுகின்றனர். சுதந்திர தினத்தைக் கொண்டாடிவிட்டால் மட்டும் போதுமா? கடந்த இருபத்தியொரு ஆண்டுகளிலும் சுதந்திரத்தை இலங்கை மக்கள் எப்படி அனுபவித்தார்கள்; சுதந்திரத்தினுல் இதுவரை கிடைத்த பயன் என்ன? கடந்தகால அனுபவங்களை இரைமீட்டு வருங்காலத்துக்குப் புதிய பாதை அமைக்க வழிகாணவேண்டியது நாட்டு மக்கள் அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

கத்தியின்றி, இரத்தமின்றி, உயிர்த்தியாகமின்றி பெரும் போராட்டமின்றி விடுதலைபெற்ற நாடு நமது இலங்கையொன்றுதான் என்று பெருமையுடன் கூறிக் கொள்ளலாம். இலங்கை மக்கள் இனமத வேறுபாடின்றி இலங்கையர் என்ற மனப்பான்மையுடன் ஐக்கியமாக வாழ்ந்ததால்தான சுதந்திரம் இவ்வளவு இலகுவாகக் கிடைக்கக்கூடியதாயிருந்தது. கஷ்டமின்றி சுதந்திரம் கிடைத்ததன் விளைவோ என்னவோ சமூக ஒற்றுமை குறைந்து போட்டி பொருமைகள் அதிகரித்து கிடைத்த சுதந்திரத்தைச் சரியாகப் பயன்படுத்த நாடும் நாட்டு மக்களும் தவறிவிட்டனர். இதன் விளைவாக சிறுபான்மையினர் மீது பெரும்பான்மையினருக்கு ஐயமும் பெரும்பான்மையினர் மீது சிறுபான்மையினருக்கு அச்சமும் ஏற்படலாயிற்று. அச்சமும் ஐயமும் நம்பிக்கையின்மையும் எங்கு நிலவினுலும் அங்கு முன்னேற்றம் தடைப்படும். இதற்கு நமது நாட்டின் வரலாறே சான்று பகரும். அந்நியர் நமது

ஏற்படுத்திக்கொடுத்துவிட்டுப் போன ஜனநாயகஅமைப்பை அவர்கள் என்ன நோக்கத்துடன் அப்படிச்செய்தார்கள் என்பதை தெரிந்தோ, தெரியாமலோ, சிறுபான்மையினரை ஆட்சிசெலுத்துவது தான் சுதந்திரத்தின் பெறுபேறு என்று சிலர் தவருக விளங்கிக்கொண்டு செய்த காரியங்கள் — அவை தெரிந்தோ தெரியாமலோ அல்லது ஆதிக்கப்போட்டியின் காரணமாகச் செய்த காரியங்கள் தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்து, நாட்டின் முன்னேற்றத்தைத் தடைசெய்து, நமது நாடு பின்தங்கச்செய்தது என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

ஆனுலும்பெரும்பான்மை மக்களும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் அரசியல் ஸ்தாபனங்கள் சமீபகாலத்தில் உணர்ந்துகொண்டிருப்பது எதிர்காலம்பற்றி நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது.

சிறுபான்மையினரின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாமல் நாடு முன்னேற முடியாது என்பதைப் பெரும்பான்மைச் சமூகத்தினர் உணர்ந்துவிட்டனர். இதே சமயம் சிறுபான்மைச் சமூகத்தினரும் பெரும்பான்மைச் சமூகத்தினரின உதவியும் ஒத்துழைப்பும் நட்புறவும் இல்லாமல் முன்னேற முடியாதென்பதையும் என்னதான் பிரச்னைகள், கஷ்டங்களிருந்தாலும் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமையும் பொறுப்பும் நிறையவுள்ளதென்பதையும் கடந்தகால அனுபவங்களிலிருந்தாவது உணர்ந்து தாமுகவேணடும்.

விவசாயத்திலும், கைத்தொழில்களிலும் சென்ற சில வருடங்களில் நமது நாடு, பலவித கஷ்டங்களுக்கிடையிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறதென்பதை

# சுதந்திர இலங்கை சுபிட்சம் பெற...

இலங்கை சுதந்திரம் பெற்று இருபத்திரண்டு ஆண்டுகள் நேற்றுடன் கழிந்து இன்று புதிய ஆண்டு தொடங்குகின்றது இச்சமயம் நாட்டின் தற்போதைய நிலை பற்றியும் நாட்டு முன்னேற்றத்திற்கு அரசு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்கிருர் கட்டுரையாளர்.

-- ஆ. தேவராசன் --

இலங்கை சுதந்திரமடைந்து கால் நூற்ருண்டு நிறைவுற இன்னும் மூன்று ஆண்டுகளே உள்ளன. இந்த நிலையில் நமது பொருளாதார வளர்ச்சியை நோக்க வேண்டியது அவசியம் ஒரு சுதந்திர நாட்டின் அடிப்படைத் தேவை-அதன் சுதந்திரத்துக்கு அணிகலமாகஇருப்பது-பொருளாதார வளம் போதும் என்ற பொன்செய்யும் நிலை பிறரை நடாமல் இருக்கக் கூடிய நிலையில் இருக்கும் நாடே நாடுஎன்று வள்ளுவரும் கூறியுள்ளார். நாட்டுவளம் காக்கப்பட்டு, பெருக்கப்பட்டு மக்கள் பேணப்பட்ட நிலையில்தான் ஒரு நாட்டைச் சுதந்திர நாடு என்று கூறலாம். இலக்கியங்கள் காட்டும் பசியும் பிணியுமின்றி வசியும் வளனும்சிறந்த நாடே நாடு.

### சனப்பெருக்கம்

சுதந்திர இலங்கையில் சனப்பெருக்கம் வளர்ந்த அளவுக்கு பொருளாதாரம் வளரவில்லை பொதுத் தேர்தலின் போது பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வளர்க்கப்பட்ட சனத் தொகையின் பிரதிநிதிகளான இளைஞர்கள் தமது வாக்குப் பலத்தை ஆட்சியிலிருக்கும் கட்சிக்கு எதிராகப்பாவிப்பதைக் காணமுடிகிறது. அதாவது ஒவ்வொரு பத்து ஆண்டுக்கும் புதிய புதிய பிரச்னைகள் தோற்றுகின்றன. அவை இளைஞர் சமுதாய விரிவின் பிரதிபலிப்புகளாகும் அவர்கள் பிரச்னைகள் தீர்க்கப்படாத நிலையில் அவர்களின் சிந்தனை ஆளும் கட்சியை அகற்ற வேண்டும் என்று செயற்படுகிறது வளர்ந்துவரும் இளைஞர் எண்ணிக்கைக்கு ஏற்ப தொழில் வளம் பெருகவில்லை, தொழில் வாய்ப்புகள் முடங்கி விடுகின்றன. இதன் சாதாரண விளைவுதான் இளைஞர் பிரச்னைகள் சாதாரணமாக உலக நாடுகள் எங்கும் இளைஞர் பிரச்னைகள் வளர்ந்திருப்பினும் இலங்கையின் பிரச்னைகள் தனித்தன்மை வாய்ந்தவை என்றே கூறவேண்டும் காரணம் இலங்கையில் இப் பிரச்னை இருப்பதற்கு தொழில் வாய்ப்பு இல்லாமையே இலங்கையில்

தொழில் வாய்ப்பு இல்லாத நிலையில் ஒரு லட்சம் இளைஞர்வரையில் இருக்கிருர்கள் இதன் தாக்கம் மிகப் பெரிது ஒன்று இத்தனை பேருக்கும் உணவும் உடையும் உறங்க இடமும் கொடுக்க வேண்டிய பொறுப்பு நாட்டைச் சேர்ந்தது. அதே நேரத்தில் இத்தனை இளைஞர்களின் உழைப்பையும் பொருளாதார முன்னேற்றத்திற்கு இணைக்கும் சக்தியையும் நாடு இழக்கிறது.

### நாட்டின் பொருளாதாரம்:

நமது நாடு பொருளாதார வளம் குன்றிய நாடல்ல ஆனுல் பொருளாதார வளங்களை நாட்டுமுன்னேற்றத்துடன் இணைத்துச்செயற்பட நாம் தவறி வருகிருேம் விவசாயத் துறையில் இப்போ தான் ஓரளவு ஊக்கம் காண்பிக்கப் படுகிறது நில வளம் குறைந்த நம் நாட்டுப் பிரதேசங்களுக்கூடாக நாட்டில் உள்ள ஆறுகள் செலுத்தப்பட வேண்டும் நீர்வளம் பெருக்கப்பட்டால்தான் எல்லாப்பிரதேசங்களும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவமுடியும் ஒவ்வொரு பிரதேசத்து வளமும் அவ்வத் துறைக்கு ஏற்ப நாட்டுக்காப் பயன்படுத்தப்பட வேண்டும் இன்று இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாக தேயிலை, இறப்பர், தேங்காய் ஆகிய மூன்றுமே திகழ்கின்றன. தேங்காய் வேறு நாடுகளில் இருந்தும் உலகச் சந்தைக்கு வருவதால் உலகச் சந்தையில் ஏற்படும் சிறு விலைவீழ்ச்சியும் நமது தெங்குப் பொருள் தரும் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிக்கும். இறப்பரிலும் செயற்கை றப்பரும் மலேசிய றப்பரும் இருப்பதால் உலகச்சந்தையில் கிராககி குன்றி விட்டது. மீதியாக

இருப்பதுதேயிலை தேயிலைக்கும் பல நாடுகளில் இருந்து இன்று போட்டி தோன்றியுள்ளது. எனவே தேயிலையின் நிலையும் உறுதியாக இல்லை. இந்த நிலையில் கைத்தொழில் மூலமும் நமது நாட்டைவளப்படுத்தவேண்டும். பிரதேச வேறுபாடின்றி அவ்வப்பிரதேச பொருளாதாரவளம் ஆராயப்பட்டு, நாட்டுக்காகப் பாவிக்கப்படவேண்டும். எந்தப்பிரதேசத்தில்என்ன கைத்தொழிலைத் தொடங்கலாமோ அந்தப் பிரதேசத்தில் அது தொடக்கப்படவேண்டும். முக்கியமாக கனிப்பொருட்கள் ஏனைய பிரதேசங்களைவிட வரட்சிவலயங்களான வடக்குக் கிழக்கில் மலிந்து கிடக்கின்றன-வவனியாப் பகுதிகளில் மிக அதிகமாக இவை காணப்படுகின்றன. இந்தக் கனிப்பொருட்கள் நாட்டு வளத்தைப் பெருக்கக்கூடிய முறையில் அரசாங்கம்அவற்றைப் பயன்படுத்தி கைத்தொழிலைத் தொடக்கவேண்டும். இல்லையேல் தனியார் துறைக்கு தகுந்த சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்.

### பொருளாதார வளர்சசியில்இளைஞர்

ஒருநாட்டின் அருஞ் செல்வங்கள் இளைஞர்கள். நாட்டு வளத்தைத் தகுந்த முறையில் வளப்படுத்த வல்லவர்கள் இளைஞர்கள். அவர்கள் உழைப்பாலேயே முன்னேறிய நாடுகளெல்லாம் முன்னேறியிருக்கின்றன. இலங்கையில் பெருக்கப்படவேண்டிய வளங்கள் உண்டு. வளப்படுத்தத் திடமுள்ள இளைஞர்களும் உண்டு. ஆனுல் இரண்டையும் இணைக்கும் திட்டம்தான் இல்லை. தொழில் வாய்ப்பு இல்லாமல் இளைஞர்கள் தமது இளமையை வீணுககிருர்கள். தொழில் வளத்தைப்பெருக்

அமைத்தோ வாழ முயற்சி செய்யவேண்டும்; நாட்டையும் வாழவைக்கவேண்டும். நாட்டில் ஒவ்வொருவரும் வாழ்ந்தால் நாடு வாழும்.

### கல்வித் திட்டம

இன்றைய இளைஞர்களின் அவல நிலைக்கு நாட்டில் கல்வித்திட்டமேகாரணம். நாட்டைச்சுரண்டவந்த அந்நியர்கள், தமக்கு எடுபிடி வேலைக்கு ஆங்கிலம் தெரிந்த சில ஊழியர்களை உற்பத்தி செய்தனர். அந்த அளவுக்குப் பயன்படும் கல்வித்திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்தினர். சுதந்திரம் கிடைத்து கால்நூற்ருண்டு கழியும் காலம் வந்த பின்னும் நாம் அதே கல்வித்திட்டத்தை நம்பியிருக்கிருேம். இந்தநிலைமாறி தொழில் வளம் பெருக்கக்கூடிய தொழிற்கல்வி புகுத்தப்படவேண்டும். திட்டங்கள் தீட்டப்பட்டும் நடைமுறைக்கு வரவில்லை. முதற்கோணல் முற்றும் கோணல் என்பார்கள். நமதுபொருளாதாரத் துறையின் மந்த நிலைக்கு இதுவே காரணம். இந்தக் கல்விமுறை சுரண்டிகளின் சுகவாழ்வுக் கல்விமுறை-நீக்கப்பட்டாலொழிய நமக்கு விமோசனம் கிடையாது. தொழிற்கல்வியின் அவசியத்தையும், பெறுபேறுகளையும் இளைஞர்கள் நன்கு உணர வேண்டும். உணர்ந்து தமது போக்கைத் திசை திருப்ப வேண்டும். தொழிற்கல்வியின் மகத்துவத்தை ஏற்றிப் போற்றவேண்டும். செய்யும் தொழிலே பொன்செய்யும் தெய்வம் என்ற நினைவும் உணர்வும்ஏற்படவேண்டும், இந்தநிலை ஏற்பட்டால்இளைஞர்கள் வாழ்வு பெறுவர்; பொருளாதாரம் உயரும், நாடு வாழும். இதை ஏற்றுக் கொள்ளாத அளவில் நமக்கு விடிவில்லை.

# செய்திச் சுருக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிலும் நகரிலும்

இயற்கை மரணமடைந்த முன்னுள் அமெரிக்க ஜனுதிபதி ஜனரல் ஜெஸன்ஹோவரின் பிரேதம் ஊர்வலம் போனபோது ஒரு அமெரிக்க பாலகன் தனது தாயை நோக்கி 'மம்மி இவரை யார் சுட்டது? என்று கேட்டானும்.

அந்த நாகரீகமான தேசத்திலே ஒருவரை ஒருவர் சுட்டுத் தள்ளுவது, எங்கள் நாட்டிலே எலிகளை அடித்துக்கொல்லுவது போல, மிகவும் சர்வசாதாரணமாகிவிட்டது. பத்து பன்னிரண்டு வயது வந்த அமெரிக்க பையன்களும் துப்பாக்கியை இழுப்பதற்கு சிறிதும் தயங்கவேமாட்டார்களாம்.

இதற்கெல்லாம் காரணம் யாது என்று அமெரிக்க நிபுணர்களே ஆராய்ந்து பார்த்து சினிமாவும் டெலிவிஷனுமே காரணம் என்று கண்டுபிடித்திருக்கிருர்கள். சின்னஞ்சிறு வயதில் விபரம் அறியாத சிறுவர்களை சினிமாவும் டெலிவிஷனும் பழுதாக்கி விடுகின்றன.

இந்தத் தொல்லை அமெரிக்காவில் மட்டுமல்ல நமது நாடுகளிலும் பெரிய கொள்ளை நோயாக பரவியிருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு தமிழ்நாட்டில் சிறந்த நாடகமணி டி. கே. சண்முகம் ஒரு கூட்டத்தில் பேசும்போது 'தகப்பனும் மைந்தனும் ஒன்ருகச் சேர்ந்து சினிமா பார்க்க முடிகிறதில்லையே' என்று கவலைப்பட்டார். இருவடுக்கும் டிக்கட் கிடைக்காமலல்ல!

நமது தயாரிப்பாளர்கள் வெளியிடும் தமிழ்ப் படங்கள் அவ்வளவு ஆபாசம் நிறைந்தவையாய் இருக்குதாம். தகப்பனும் மைந்தனும் மட்டுமல்ல, தாயும், மகளும், மாமனும் மருமகனும், மாமியும் மருமகளும் எவருமே சேர்ந்து பார்க்கக் கூடாத நிலைமையில் நமது தமிழ்ப்படங்கள் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன.

தமிழரின் பண்பாட்டுக்கு முற்றிலும் விரோதமான உடைகளும் நடிப்புகளும் காட்சிகளும் தோன்றி இளம் மட்டங்களுக்கு விபரீதமான எண்ணங்களைத் தோற்றுவிக்கின்றன என்பது உண்மை. இதுமட்டுமல்ல. சினிமாக்களுக்கு பாட்டு எழுதும் புலவ சிகாமணிகளுக்குத்தான் எத்தனை கற்பனை! எத்தனை உணர்ச்சி ஊட்டம்!

ஆஹாஹா! மிகவும் அற்புதம், அபாரம்!

எத்தனை அரிய கருத்துகள் தான் அவற்றில் புதைந்துள்ளன!

சில உதாரணங்களைப் பார்ப்போமா? எழுதவே கை கூசுகின்றது, ஆனுல் எழுதியே ஆகவேண்டும்.

எல்லாம் இரட்டைக் கருத்துட்பட்ட பாடல்கள் பிஞ்சு உள்ளங்களில் பிணக்கை உண்டு பண்ணும் பாடல்கள், வீட்டுக்குத் திரும்பியும் இரவில் அசை போடும் பாடல்கள்.

எத்தனையோ பேருக்கிட்ட இலந்தைப்பயம் பார்த்தியே நீ எடுத்துப்பார்த்த பயங்களிலே இம்மளவு சைஸைப் பாத்தியா? இதுஎங்கேபோய் தாக்குகிறது? இன்னுமொன்று.

'எண்ணமெல்லாம் ஓரிடத்தே நாடுதே!

இதன் அர்த்தம் என்ன?

அந்தக்காலத்தில் வந்த சினிமாக்காட்சிகள்சிலஞாபகத்துக்கு வருகின்றன. கலைவாணர் எஸ்.எஸ். கிருஷ்ணனும் டி. ஏ. மதுரமும் எல்லாப் படங்களிலும் காதல்ஜோடிகளாகவே வருகிருர்கள். காதல் கட்டங்களில் கிருஷ்ணன் மதுரத்தையே அப்படியே கட்டி அணைத்து கடித்துவிடப் போவதாக பாவனைசெய்து நடிப்பார். ஆனுல் கிட்ட நெருங்கமாட்டார். தூரத்தில்நின்று கையால்தொடப் போவதுபோல பாசாங்கு செய்வார்.

இன்று நிலைமை தலைகரணமாகிவிட்டது. காதலனும் காதலியும் கட்டிப்புரண்டு உருளுகிருர்கள்.

இதுதமிழ்சமூகத்தின் முன்னேற்றத்தைக் குறிக்கிறதா அல்லது நான்தான் எதிர்நீச்சல் போடுகிறேனே தெரியவில்லை.

இந்தியப் பண்பாடு, கலாச்சாரம், ஆண் - பெண் உறவு முறை ஆகியவற்றை எல்லாம் அகில உலகத்துக்கும் பறை சாற்றி வெற்றிப் புகழ் நாட்டிய 'செம்மீன்' என்ற மலையாளப் படத்தை நமது தமிழ் நடிகர்களும் டைரக்டர்களும் ஒவ்வொரு நாளும் மூன்று காட்சிகள் பார்க்கவேண்டுமென்று ஒரு தண்டனை போட்டால் என்ன என்று கேட்கிறேன்!

—வழிப்போக்கன்

யின்மையும் எங்கு நிலவி னாலும் அங்கு முன்னேற்றம் தடைப்படும். இதற்கு நமது நாட்டின் வரலாறே சான்று பகரும். அந்நியர் நமது நாட்டை விட்டுச் சென்றாலும் அவர்கள் ஆக்கித் தந்து விட்டுப்போன அரசியல் அமைப்பும் ஆட்சி அமைப்பு முறையும் நமது நாட்டில் தேசிய ஐக்கியம் நிலைபெறு வதற்கும, நாடு முன்னேறு வதற்கும் பெருமளவு இடை யூறாக இருந்துவந்திருக்கிற தென்பதைப் பலரும் இப் போது உணர்ந்துவருகின்ற னர். அந்நியரின் ஆட்சி மறைந்தாலும் அவர்கள் தொழில்களிலும் சென்ற சில வருடங்களில் நமது நாடு, பலவித கஷ்டங்களுக் கிடையிலும் முன்னேறிக் கொண்டிருக்கிற தென்பதை ஒப்புக்கொள்ளத்தான்வேண் டும். இந்த முன்னேற்றம் தேசியஐக்கியத்தின் பயனாக வும் நாட்டுப் பற்றின் விளை வாகவும் ஏற்பட்டுள்ளதென் தையும் மறுக்கமுடியாது. இது மேலும் மேலும் நீடித்து நிரந்தரமாகவேண் டும். அப்போதுதான் பொரு ளாதார சுதந்திரம் கிடைக் கும் நாம் பெற்ற சுதந் திரமும் நிலைபெறும்.

# திருமலையில் பயங்கர

## தீ விபத்து; ஒரு கடை சேதம்

திருகோணமலை, செவ்

திருக்கோணமலை நகரமே தீப்பிடித்து அழிந்து விடக் கூடிய பயங்கர தீவிபத்து ஒன்று நேற்றிரவு ஏற்பட் டது: ஆனாலும் தீயணைப்புப் படையினரின் முயற்சியா லும் அவர்கள் நடத்திய கடும் போராட்டத்தினாலும் நிலைமை சமாளிக்கப்பட்டது ஒருசைக்கிள் கடை மட்டும் தீவிபத்தினால் நாசமானது:

இந்தவிபத்தினால் 'பிரிட் டிஷ் ஸ்ரோர்ஸ்' என்ற சைக்கிள் கடையிலிருந்த புதிய சைக்கிள்கள் 25ம் தளபாடங்களும் சைக்கிள் உதிரிப்பாகங்களும் தீப்பிடி த்து நாசமானதாக அந்தக் கடையின் உரிமையாளரான திரு. எஸ். கனகசூரியம்தெரி வித்தார்.

நேற்றிரவு எட்டரைமணி யளவில் தமது கடையைப் பூட்டிவிட்டுச் சாப்பாட்டுக் குத்தாம் சென்றதாகவும் திரும்பி வந்தபோது கடை தீ பிடித்து எரிந்து கொண் டிருந்ததைப்பார்த்ததாக வும் திரு கனகசூரியம் கூறி னார்.

தனதுகடையின் பின்புற முள்ள குசினியிலிருந்து அல் லது மின்சார ஒழுக்குக் காரணமாக இத்தீவிபத்து ஏற்பட்டிருக்கலாமெனத் தாம் கருதுவதாகவும் அவர் சொன்னார்.

---

## கருணாநிதி மொரிஷியஸ் போவார்

சென்னை, பெப். 3

தமிழக முதலமைச்சர் கருணாநிதியை அழைப்ப தற்கு மொரிஷியஸ் அர சாங்கம் முடிவு செய்துள்ள தாக சென்னை வந்துள்ள மொரிஷியர் தமிழர் ஏ. வி. செட்டியார் அறிவித்துள் ளார்.

தமிழக அமைச்சர் சத் தியவாணிமுத்து அம்மை யார் அண்மையில் மொரி ஷியஸிற்கு விஜயம் செய்தி ருந்தார். இங்கே வாழ்கின்ற தமிழர்கள் தமிழைப் பேச முடியாதவர்களாகவிருக் கின்றனர் என்றும், ஆனால் தமிழ்க் கலாச்சாரத்தை அனுஷ்டித்து வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. மொரிஷியஸிலுள்ள தமிழர் கள் தமிழ்நாட்டுத் தலைவர் கள்மீது மிகுந்த அபிமானம் வைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## பெரியபுராண வகுப்பு

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை சேக்கி ழார் மன்றத்தின் ஆதரவில் ஒவ்வொருபோயாதினத்திற் கு அடுத்தநாள்மாலை 5.30 மணி தொடக்கம் 7 மணி வரை யாழ் இந்துக் கல்லூ ரிப்பிரார்த்தனை மண்டபத் தில் பெரிய புராணவகுப்பு வித்துவான் கா கி நடராஜ னால் நடாத்தப்பட்டு வரு கிறது. இப்போது திருநா வுக்கரசு நாயனார் புராணம் நடைபெறுகின்றது போயா தினத்துக்கு அடுத்த நாள் வெள்ளிக்கிழமையாகவிருந் தால் வகுப்பு அடுத்த நாள் மாலைநடைபெறும்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக் கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு பெப்ரவரிமாதம்4-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# செய்திச் சுருக்கம்

### இலங்கை அங்கத்தவர்

கோட்டை, செவ்

பிலிப்பைன்ஸ் தேசத்தி லுள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்தின் சபைக்கு அங்கத்தவ ராக விவசாய உணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டா நியமிக்கப்பட்டுள் ளார்.

இச்சபையின் முதலாவது இலங்கை அங்கத்தவர் இவரேயாவர். திரு.பண்டா நாலு வருட காலத்துக்குக் கடமையாற்றுவார்.

0 0 0

### மீனவருக்கு இயந்திர வள்ளங்கள்

கோட்டை, செவ்

இலங்கையின் 22-வது சுதந்திர தினவிழாவை யொட்டி இலங்கை மீனவர் களுக்கு 50 லட்சம் ரூபா கடனுதவி கிடைக்கவிருக் கிறது.

நாட்டின் பல பாகங்களி லுமுள்ள மீனவர்களுக் கிடையே 250 இயந்திர வள் ளங்கள் வாங்குவதற்காக இந்தப் பணத்தைப் பகிர் ந்து கொடுப்பதற்கு கைத் தொழில், கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப் குண வர்த்தன முன்வந்திருக்கி றார்.

### பிரதமர் தமிழில் கையொப்பம

மட்டக்களப்பு, செவ்

மட்டக்களப்பு தேசிய அபிவிருத்திப் பொருட் காட்சியை ஒட்டி 'சிறப்பு மலர்' ஒன்று வெளியிடப் பட்டுள்ளது. இம்மலருக்கு பிரதமரிடமிருந்து தமிழில் வாழ்த்துச் செய்தியும் அவ ரது கைப்பட தமிழில் ஒப்ப மும் கிடைத்துள்ளது.

0 0 0

### சுருட்டு விலை உயர்வு தீர்மானமில்லை

கோட்டை, செவ்

சுருட்டு உற்பத்தியாளர் கள் சங்கத் தூதுகோஷ்டி யினர் விலை உயர்வுக் கோரி க்கை சம்பந்தமாக கொழு ம்பு சுருட்டு விற்பனையாளர் கள் சார்பில் திரு. மயில் வாகனம் குமரேசபிள்ளை தலைமையில் கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டம் விலை உயர்வு சம்பந்தமாக எந்த விதமான முடிவும் எடுக்க முடியாத நிலையில் முடிவுற் றது.

விற்பனையாளர்கள் ஏகோ பித்து கூட்டத்திற்கு வரா மையே இதற்கு முக்கிய காரணமாகும்.

### திரும்ப வேண்டிய நிலை

சிங்கப்பூரில் உள்ள வெளி நாட்டுப் பிரஜைகள் அங்கு வேலை பெறுவதற்குப் 'பர் மிட்' பெற வேண்டுமென்ற புதிய நிபந்தனையால் சிங்கப் பூரில் வாழும் இலங்கையர் கள் நிர்க்கதி அடைந்துள்ள னர்.

அண்மையில் சிங்கப்பூர் அரசு நிறைவேற்றிய குடி யேற்றச் சட்டமே இதற் குக் காரணமாகும்.

சிங்கப்பூரின் மொத்த சனத்தொகை 17 லட்சம். அவர்களில் 1,42,000 பேர் இந்தியா, இலங்கை, பாகிஸ் தானியர்கள் என்று 1961ம் ஆண்டின் குடிசன மதிப்பீட் டிலிருந்து தெரியவருகிறது. சிங்கப்பூர் அரசாங்கம் நிறைவேற்றியுள்ள குடி யேற்றத் திருத்த சட்டத் தின் பிரகாரம் அங்குள்ள இலங்கையர்கள் வேலை இழ ந்து நாடு திரும்ப வேண்டிய நெருக்கடியான நிலை ஏற் பட்டுள்ளது என செய்திகள் கூறுகின்றன.

0 0 0

### நிர்வாக மாற்றம

குண்டசாலையில் விவசா யப் பயிற்சிப் பாடசாலையை பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர் மானித்துள்ளது

உதைபந்தாட்டம்

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், புதன்

கண்டி பேராதனை பல் கலைக் கழக உதைபந்தாட் டக் கோஷ்டியும், யாழ். பாடசாலை உதைபந்தாட் டத் தெரிவுக் கோஷ்டியும் இன்று சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி மைதா னத்தில் மோதுகின்றன.

யாழ். பாடசாலை தெரி வுக் கோஷ்டிக்கு ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி வீரர் அன்ரன் சந்திரசேகர் தலைமை தாங்குன்றார்.

(தே. நி(

## கார் விற்பனைக்கு

சி. என். இலக்கத்தொடர் A 40 கார் விற்பனைக்கு உண்டு தொடர்பு கருணப் பிரவாசா, வதிரி, கரவெட்டி.

திட்டமிதான் இல்லை. தொழில் வாய்ப்பு இல்லா மல் இளைஞர்கள் தமது இளை மையை வீணாக்கிறார்கள். தொழில் வளத்தைப்பெருக் கத்தக்க இளைஞர்களை வைத் துக்கொண்டும் செயற்திட் டம் நன்கு அமையாததால் பொருளாதார வளத்தை முன்னேற்றமுடியாமல் நாடு பின்தங்கி நிற்கிறது. இந்த நிலை மாறவேண்டும். இளை ஞர்களும்அரசாங்கத்தையே அனைத்துக்கும் நம்பியிருக் கும் நிலையிலிருந்து விலகி தமக்குள்ளேயே கூட்டுறவு முயற்சிகளால் சிறு கைத் தொழில்கள் செய்தோ, தொழில் நிறுவனங்களை ... பொருளாதாரம் உயரும், நாடு வாழும். இதை ஏற்றுக் கொள்ளாத அளவில் நமக்கு விடிவில்லை.

### நாடு நலம்பெற

மூலவளம் செறிந்தது நமதுநாடு; இளைஞர் உண்டு செயற்பட; திட்டம் வேண் டும் பயன்பெற- நலம்பெற; ஆக்கவேண்டும் கல்வித்திட் டம் நாட்டுக்கு ஏற்றதாய்- தொழில் மணம் கொண்ட தாய்; போற்றவேண்டும் இளைஞர், தம்மை முன்னே ற்ற விழையின் வளம் சுரக் கும்-நாடு சிறக்கும்-பொருள் பெருகும்-வாழ்வு வாழ்வா ங்கு அமையும்.

ஆசிரியருக்குக் கடிதம்

## சுதந்திரதினம்

தமிழ் சமூகத்தை சேர்ந்த வர்கள் எவராலும்சுதந்திர தினம் கொண்டாடுவது முறையல்ல தமிழ் சமூகம் சுதந்திரம் இழந்து தங்கள பாஷை சுதந்திரம் இழந்து அடிமையாக நடத்தப்படுப வர்களுக்குசுதந்திரம் எங்கே இருக்கு? படிப்படியாக வெளியில் காட்டாமல் எங் கள அன்னைதமிழுக்கு அழிவு தேடப்பார்க்கிறார்கள. ஊர் காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் சொன்னது போல் ஒருவரும் சுதந்திர தினம் கொண்டாடாமல் துக்கதினம் கொண்டாட வேண்டுமென அன்னை தமி ழின் பெயரால் கேட்டுக் கொளளுகிறேன்.

தமிழினம் என்ற பெரு மையை மறந்து யாராவது அரசாங்கத்தில் உள்ள ஓர் பெரிய பதவியிலிருப்பவர் வந்தால் அவருக்கு தக்கின வரவேற்பைக்கொடுத்து அனு ப்பாமல் தமிழனை சிறுமைப் படுத்திஅடிபணிந்து மண்டி யிட்டு கெஞ்சுகிறார்கள் அப் படி செய்பவன் தன்னை எவ் வளவோ கீழ்நிலைக்கு பாவி த்து நடக்கிறான் இப்படி யான செயல்கள் தமிழ னைப்பற்றி மிகவும் கேவல மாய் தென்மாகாணத்தவர் கள் நினைக்கிறார்கள் எவ்வ ளவு தங்கள பணத்தை செலவு செய்கிறார்கள இப் படியானமனப் பான்மையை இனிமேல் கைவிட்டு தமிழன் தனது முன்னோர் விட்டுப்போன மதிப்பை இழக்காமல் தமி ழன் மற்றவர்களிலும் பார் க்க மேம்பட்டவனல்லாமல் குறைந்தவனல்ல என்று நடக்கும்படி தமிழன் என்ற அபிமானத்துடன் தமிழன் னையின் பேரால் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சி. முத்துக்குமாரசாமி
மானிப்பாய் தெற்கு

உள்ளூராட்சி வாரம்

## கோப்பாய் கி. ச. ஏற்பாடு

கோப்பாய், செவ்வாய்

கோப்பாய் கிராமசபை யினர் இம்மாதம் 8-ந் திகதி முதல் 14-ந் திகதி வரை நடைபெறவுள்ள உள்ளூ ராட்சி வாரத்தை கொண் டாட விரிவான ஒழுங்குகள் செய்துள்ளனர்.

முதலாம் நாள் சமயப் பிர சார தினத்தையொட்டி கலைமணி வாசிகசாலையில் விசேஷ நிகழ்ச்சி இடம் பெறும். தொழில் மகத்துவ தினத்தையொட்டி தெருக் கள் விஸ்தரிப்பு, மயான சிரமதானம் முதலியன நடைபெறும். சுகாதார ஆரோக்கிய தினத்தன்று சபை எல்லைக்குள் வசிக்கும் தேகாரோக்கியமுள்ள தாய்க்கும், சிசுவுக்கும் 3 பரிசுகள் வழங்கும் திட் டம் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

நூல்நிலைய இலக்கிய விழாவையொட்டி கோப் பாய் திருவருள் தவநெறி மன்றம் இலக்கியக் கருத் தரங்கொன்றை ஏற்பாடு செய்துள்ளது. இறுதி நாள் சமூக தினத்தை முன்னிட்டு கோப்பாய் வடக்கில் பொதுக்கூட்டமொன்றும் நடைபெறவுள்ளது.

## இளைஞர் தற்கொலை

உடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாய் வடக்கைச் சேர்ந்தஇராசையா சேனாதி ராசா (வயது 28) எனினும் இளைஞர் கிருமிநாசினி அரு ந்தி தற்கொலை செய்து கொண்டார்: இவர் ஒரு குழந்தைக்குத் தந்தையா வார்.

மல்ல. சினிமாக்களுக்கு பாட்டு எழுதும் புலவ சிகா மணிகளுக்குத்தான் எத்தனை ... ஒரு தண்டனை போட்டால் என்ன என்று கேட்கிறேன்!

—வழிப்போக்கன்

## கூப்பனைத்திருப்பிப் பெறுவதில் விவசாயப்படை வீரர் அவதி

உடுப்பிட்டி, செவ்வாய்

விவசாயப்படையில் விவ சாயப்படை வீரர்களாகப் பணிபுரிந்து விலகியவர்கள் தமது அரிசிக் கூப்பன்களை யும் விவசாயப்படை முகா மில் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கவேண்டி ஏற்பட்டுள் ளது.

ஒட்டி சுட்டான் விவசா யப்படை முகாமில் விவ சாயப்படை வீரராகப் பணி புரிந்த அல்வாய் மேற்கைச் சேர்ந்த திரு. ஆர். சத்திய சிவபாலச்சந்திரன் என்னும் இளைஞர் முகாமிலிருந்து விலகி எட்டு மாதங்களாகி விட்டபோதிலும் முகாம் இன்னும் தனது கூப்பனைத் திருப்பித்தரவில்லையென்று புகார் செய்துள்ளார்.

விஸ்வமடுவிவசாயப்படை முகாமில் விவசாயப்படை வீரராகப்பணி புரிந்த கரண வாய் வடக்கு மூத்தவிநாய கர் கோவிலடியைச்சேர்ந்த திரு. ஏ. கிருஷ்ணபிள்ளை என்னும் வாலிபருக்கும் இக் கதி ஏற்பட்டு உள்ளது.

இவர் விவசாயப்படையில் இருந்து விலகி ஒன்றரை வருடங்களுக்கு மேலாகி விட்டபோதிலும் அவரது அரிசிக்கூப்பன் இன்னும் திருப்பி அனுப்பிவைக்கப் படவில்லையாம் இதுசம் பந்தமாகப் பலதடவைகள் முகாமுக்கு அவர் புகார் தெரிவித்தும் எவ்வித பதி லும் கிடைக்கவில்லை.

### குறைந்த விலையில் வானொலி

கோட்டை, புதன்

கல்வி கற்பதில் பயனளிக்க வல்ல வானொலிக்கருவிகள், நாடாப்பதிவு கருவி, ஒலி பெருக்கி போன்ற சாதனங் களைக் குறைந்த விலையில் பாடசாலைகளுக்குத் தருவித் துக்கொடுக்க கல்வி கலாச் சார அமைச்சு முன்வந்துள் ளது.

இப்பொருட்களை வசதிக் கட்டணத்திலிருந்து வழங்கு வதற்கு அனுமதி அளிப்ப தாயும் தேவையான பொரு ட்களின் பட்டியலை அனுப்பி வைக்குமாறும் பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள் ளனர். ......

## விவசாயக் கருத்தரங்கு

வேலணை, செவ்வாய்

வேலணை கலைமகள் இளை ஞர் விவசாயக் கழகம், வேலணை வளர்ந்தோர் விவ சாயிகள் ஆதரவுடன் வேலணை கி. ச. கட்டிடத் தில் ஒரு கருத்தரங்கை நடத்தியது. கருத்தரங்கிற்கு யாழ். மாவட்ட விவசாய அதிபர் திரு. மாணிக்கவாச கர் தலைமை வகித்தார். மண்வளம், நீர்வளம், பற்றி பூமிக்கு ஏற்ற தாவரம் பயி ரிடுதல், குளம் கட்டுதல், கமக்காரர்களுக்கு கடன் வசதி, இலவச பயிற்சிவகு ப்பு நடாத்துதல் போன்ற பல விடயங்கள் பற்றிய கருத்துக்கள் ஆராயப்பட் டன ஊர்க்காவற்றுறை காரியாதிகாரி திரு. விநாயக லிங்கம், யாழ். கிருஷிக போதனாசிரியர், தீவுப்பகுதி கிருஷிக போதனாசிரியர் வேலணை கிழக்கு விவசாய உத்தியோகஸ்தர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் சமூகமளித்திருந் தனர்.

### பத்திரிகைஊழியர் திருமபினா

கொழும்பு, திங்கள்

நேற்றுமட்டும் வேலைநிறுத் தம் செய்த 'டைம்ஸ் ஒவ் சிலோன்' பத்திரிகை ஸ்தா பன ஊழியர்கள் இன்று வேலைக்குத்திரும்பினர்வேலை நிறுத்தஞ்செய்யும் ஊழியர் கள் இன்று சுலோக அட்டை களைத்தாங்கியபடி வெளியே நின்றனர்.

வெலிங்டன் யாழ்ப்பாணம்

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க

செம்மீன்

தொடர்ந்து காண்பிக்கப்படும்

விரைவில் எதிர்பாருங்கள்!

தில்லானா மோகனம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org